Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 025 | திங்கட் கிழமை | மார்கழி 6 ஆம் நாள் 21 டிசெம்பர் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## ஜவர் இறப்பு; கொரோனா காவு 176

கொழும்பு, டிசெ.21

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார்.

நான்கு ஆண்களும், 19

# இறந்துவிட்ட தீர்மானத்தை உயிர்ப்பிக்கவே முடியாது!

## எக்காளமிடுகிறது கோத்தாபய அரசு

கொழும்பு, டிசெம்பர் 21

கடந்த நல்லாட்சி அரசின் இணை அனுசரணையுடன் இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானங்கள் இரண்டும் செத்துப்போய்விட்டன. அதனைப் புதிய பிரேரணை மூலம் புதுப்பிக்க முடியாது.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். 19

## தனியாக வசித்தவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.21

வீட்டில் தனித்து வசித்த ஒருவர் படுக்கையில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் உரும்பிராய் வடக்கில் நடந்துள்ளது.

நா.நந்தகுமார் (வயது42) என்பரே உயிரிழந்தவராவார். இவர் ஒரு வருடத்துக்கு 19

## அமைச்சரவைக்குள்ளும் புகுந்ததா கொரோனா?

கொழும்பு. டிசெ.21

அமைச்சரவை செயலகத்தில் பணிபுரியும் 4 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

பணியாளர்களுக்குத் தொற்று 19

## தவறான முடிவெடுத்து இளம் யுவதி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ.21

இளம் யுவதி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று உரும்பிராய் கிழக்கில் நடந்துள்ளது. உ.கம்சனா (வயது-21) என்ற 19



## யாழ். நகரத்தில் பிளாஸ்ரிக் மலை

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்று கழிவு நீர் வாய்க்கால்கள் துப்புரவாக்கப்பட்ட நிலையில் அவற்றுக்குள் இருந்து பெருந்தொகை பிளாஸ்டிக் போத்தல்கள், பிளாஸ்டிக் பொருள்கள் எடுக்கப்பட்டன. 19

## மருதனார்மடம் கொத்தணி 90!

### தெல்லிப்பழையில் நேற்று இருவருக்கு தொற்று !

யாழ்ப்பாணம், டிசெ.21

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களுடன் சேர்த்து மருதனார்மடம் கொத்தணியின் எண்ணிக்கை 90ஆக அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்திலும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை 19

## நீரில் மூழ்கி மாயமான தந்தையும் சிறுமியும் சாவு

### உயிரிழப்பு மூன்றானது முல்லைத்தீவில் சோகம்

முல்லைத்தீவு, டிசெ.21

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் குளக்கட்டில் பயணித்த கப் வாகனம் தடம் புரண்டு குளத்தினுள் மூழ்கிய விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்வடைந்துள்ளது. குளத்துக்குள் காணாமற்போன தந்தையும், மகளும் நேற்றுக் காலை சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

37 வயதுடைய தந்தையும், அவரது 2 19



## வலி. வடக்கு தவிசாளரின் வாகனம் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், டிசெ.21

வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தனின் வாகனம்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஒருவர் இளவாலைப் பொலிஸாரால் 19

## பல்கலை மாணவனுக்கு கொரோனாத் தொற்று!

வவுனியா, டிசெ.21

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவன் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதையடுத்து அவருடன் தொடர்புடையவர்களை இனங்காணும் நடவடிக்கைகளில் சுகாதாரப் பிரிவினர் இறங்கியுள்ளனர். 19

## உள்ளூராட்சிகளை வசப்படுத்த தமிழ் அரசுக் கட்சி புது வியூகம்

### ஈ.பி.டி.பி, முன்னணியுடனும் பேச்சு

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை என்பவற்றில் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றில் ஆட்சி அமைப்பது தொடர்பாக ஈ.பி.டி.பியுடனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனும் இலங்கைத் தமிழரசுக் கட்சி பேச்சு நடத்தவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் 19

## இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துவோம்

### முல்லை மீனவர்களிடம் மீன்பிடி அமைச்சர் உறுதி

முல்லைத்தீவு, டிசெ. 21

இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற முல்லைத்தீவு மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கை 19

# பௌத்த அடிப்படை வாதிகளே முஸ்லிம்களை பழிவாங்காதீர்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா உருக்கம்

கொழும்பு, டிசெ.21

முஸ்லிம் மக்களின் மீது காணப்படும் அரசியல் பழிவாங்கல் நோக்கத்துக்காக , நாம் பௌத்தர்கள் எனக் கூறும் அடிப்படைவாதிகளின் முஸ்லிம்கள் மீதுள்ள வெறுப்புக்காக அவர்களைப் பழிவாங்குவது சிறந்ததல்ல என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழக்கின்ற முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எவ்வித அடிப்படையுமின்றி தகனம் செய்யப்படுகின்றமை தொடர்பில் பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இதன் உண்மைத் தன்மை தொடர்பில் அறிந்து கொள்வதற்காகவே நான் இது வரையில் இவ்விடயம் குறித்து எவ்வித கருத்துக்களையும் வெளிப்படுத்தவில்லை. அதற்கமைய உள்நாட்டு மற்றும் சர்வதேச விசேட மருத்துவர்களுடன் இவ்விடயம் பற்றி ஆலோசித்ததன் பின்னர் கருத்து வெளியிடுகின்றேன். இலங்கையில் எடுக்கப்பட்டுள்ள இந்தத் தீர்மானம் அடிப்படையற்றது. காரணம் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்கள் பெட்டி இன்றி நிலத்தில் புதைக்கப்பட்டாலும் மண் அல்லது நீர் மூலம் வைரஸ் மீண்டும் பரவ எவ்வித வாய்ப்பும் இல்லை என்று விஞ்ஞானபூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகில் முக்கிய நாடுகளில் ஆய்வு செய்யப்பட்டு இந்த விடயம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு மனிதனுக்கும் அவன் பின்பற்றும் மதமே அவனது வாழ்வில் பிரதானமாக தாக்கம் செலுத்துகிறது. எனவே இவ்வாறு மத நம்பிக்கையை மீறுவது நியாயமற்றதாகும். சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலுமுள்ள விசேட வைத்தியர்களின் நிலைப்பாடுகளைப் பெற்று சரியான வகையில் செயற்படுமாறு அதிகாரத்திலுள்ளவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன் என்றார். (ப)

மேல்மாகாணத்தில்

## பாடசாலைகள் ஆரம்பமா? இன்றையதினம் முடிவு!

மேல் மாகாணத்தில் பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பாக இன்று திங்கட்கிழமை இறுதி அறிவிப்பு வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேல் மாகாணத்தில் பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பாக சுகாதார அமைச்சர் மற்றும் சுகாதார துறையின் நிபுணர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளோம். இந்த அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து எடுக்கும் தீர்மானத்தை திங்கட்கிழமை அறிவிக்கவுள்ளோம் என்றார். (மஇ)

## கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

கிளிநொச்சி, டிசெ.21

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தன் காஞ்சிபுரத்தில் கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் நேற்று முற்றுகையிடப்பட்டது.

கிளிநொச்சி மது ஒழிப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டது. உற்பத்தியில் ஈடுபட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டு விசாரணைகளின் பின்னர் அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார் என்று கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்புப் பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்தார். (க-113)

## வீதியையும், பாலத்தையும் சீரமைத்து தரக் கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ.21

கிளிநொச்சி- விசுவமடு ஊடாக சுண்டிக்குளம் கடலுக்குச் செல்லும் வீதியை விரைவில் சீரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த பல வருடங்களாக சேதமடைந்து காணப்பட்ட குறித்த வீதி, மற்றும், பாலத்தின் சீரமைப்புப் பணிகள் கடந்த ஒரு வருடத்துக்கு முன் ஆரம்பிக்கப்பட்டன. தற்போதும் அதன் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் பருவமழை ஆரம்பித்துள்ளதன் காரணமாக குறித்த வீதியூடாகப் பயணத்தை மேற்கொள்ள முடியாதுள்ளது. 6 கிராமங்களைச் சேர்ந்த மக்கள், தனியார் காணியூடாகவே போக்குவரத்தை முன்னெடுக்கின்றோம். எமது சிரமங்களைக் கருத்தில் கொண்டு மக்கள் நலன் சார்ந்து இவ் வீதியின் சீரமைப்புப் பணிகளை விரைவுபடுத்தி போக்குவரத்தை இலகுபடுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றனர். (ப-113)

## 12 மரங்களை அகற்றுவதற்கு 4 இலட்சம் ரூபா தரவேண்டும்

### *வனவளத் திணைக்களம் அடாத்து*

வவுனியா, டிசெ. 21

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காஞ்சூர மோட்டை கிராமத்துக்கு மின்சாரத்தைக் கொண்டுசெல்வதற்காக வீதிக்கரைகளில் உள்ள 12 மரங்களை அகற்றுவதற்கு வனவளத்திணைக்களம் 4 இலட்சம் ரூபாவைக் கோரியுள்ளது என்று பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது; எமது கிராமத்துக்கு அருகில் உள்ள மருதோடையில் இருந்து ஒன்றரை கிலோ மீற்றர் தொலைவில் உள்ள காஞ்சூர மோட்டைக்கு மின்சாரத்தைக் கொண்டுவருவதற்கான மின்கம்பத்தை பதிப்பதற்கு 12 மரங்கள் தடையாக உள்ளன. இதனை அகற்றுவதற்கான அனுமதியை வனவளத்திணைக்களம் வழங்காமல் நீண்டகாலமாகத் தடையை ஏற்படுத்தி வந்தது. இது தொடர்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றையும் முன்னெடுத்தோம். அரசியல்வாதிகளிடமும் எமது பிரச்சனையை எடுத்துக் கூறினோம். தற்போது அந்த மரங்களை அகற்றுவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் அதற்காக வனவளத்திணைக்களம் 4 இலட்சம் ரூபாவை மரங்களின் மீள்நடுகைக்காக கோரியுள்ளது. இது தொடர்பாக மின்சார சபையினருக்கு கடிதம் அனுப்பப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. வன்னியில் சிங்கள குடியேற்றம் மற்றும் கிரவல் அகழ்வு செயற்பாடுகளிற்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் காடுகள் எந்த வித அனுமதியும் இன்றி அரசினாலும், தனிநபர்களாலும் அழிக்கப்பட்டுவரும் நிலையில் தமிழர்களின் பூர்வீக கிராமமான காஞ்சூரமோட்டைக்கு மின்சார இணைப்பைப் பெறுவதற்காக 12 மரங்களை அகற்றுவதற்கு வனவளத் திணைக்களம் நான்கு இலட்சம் ரூபாவைக் கோருகின்றது கவலை தருகிறது என்றனர். (ப-110)

## விமான நிலையங்கள் மீளவும் திறக்கின்றன

### ஒத்திகை நாளைமறுதினம்

கொழும்பு, டிசெ. 21

விமான நிலையங்களை மீளத் திறப்பது தொடர்பான ஒத்திகை எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது என வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள விமான நிலையங்களை எதிர் வரும் 26ஆம் திகதி மீண்டும் திறப்பது தொடர்பில் திட்டவட்டமான முடிவு எட்டப்படவில்லை. இருப்பினும் இது தொடர்பில் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான ஏற்பாடுகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார். (மஇ)

## பொலிஸ் உத்தியோகத்தர் காயம்

கிளிநொச்சி, டிசெ.21

கிளிநொச்சி, தருமபுரம் மருத்துவமனைக்கு அருகில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

கிளிநொச்சியிலிருந்து முல்லைத்தீவு சென்ற மோட்டார் சைக்கிளும் பரந்தன் நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டியும் மோதியதில் விபத்து ஏற்பட்டது. இதில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே படுகாயமடைந்தார். (ப-113)

## பெரமுன கூட்டணியில் இருந்து விலகுகின்றதா சுதந்தரக் கட்சி?

கொழும்பு, டிசெ. 21

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன முன்னணி கூட்டணியில் இருந்து பின்வாங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திர கட்சி பேச்சு நடத்தி வருகிறது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கம் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை மதிப்பதில்லை, கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு கொடுக்க வேண்டிய அந்தஸ்தைக் கொடுக்காமை போன்ற விடயங்களை சுட்டிக் காட்டி வரும் சுதந்திரக் கட்சியினர் அதனை பகிரங்கமாகவே கூறிவருகின்றனர்.

இது தொடர்பாக கலந்துரையாடல் நடத்த ஜனாதிபதி கோத்தபய ராஜபக்சவை சந்திக்க பல தடவை கோரியபோதிலும் அதற்கும் பதில் கிடைக்கவில்லை என கூறப்படுகிறது.

பிரதமருடன் இதுபற்றி பல தடவை பேச்சு நடத்தப்பட்டிருந்தும் உரிய தீர்வு சுதந்திரக் கட்சியினருக்கு கிடைக்கவில்லை என்றும் தகவல் தெரிவிக்கின்றது.

இதைடுத்தே சு.க விலகுவதற்குத் தீர்மானித்துள்ளது என்று தெரியவருகின்றது. (ம-இ)

## மஹர சிறைக்கலவரம்: கைதிகள்தான் காரணம்

கொழும்பு, டிசெ. 21

அண்மையில் மஹர சிறையில் ஏற்பட்ட சம்பவத்துக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளே காரணம் என சிறைச்சாலை ஆணையாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட கைதிகள் எவ்விதத்திலும் தொடர்புபடவில்லை என்றும், குறிப்பாக இச்சம்பவத்தைக் கட்டுப்படுத்துவதில் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் தண்டனை பெற்ற கைதிகளே என்றும் தெரிவித்தார். தனியார் தொலைக்காட்சி ஒன்றில் வழங்கிய நேர் காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-இ)

# பண்டிகைக் காலத்தில் கொரோனா தீவிரமாகும்



## வவுனியா வர்த்தக சங்கம் எச்சரிக்கை

வவுனியா, டிசெ. 21

**வவுனியா மாவட்ட மக்கள் நத்தார் மற்றும் புதுவருட பண்டிகைக் காலங்களில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளுமாறும் அவதானமாகச் செயற்படுமாறும் வவுனியா வர்த்தக சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

வவுனியா மாவட்டத்தில் கடந்த இரு வாரத்தினுள் மாத்திரம் 13 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

நத்தார் மற்றும் புது வருடக் கொண்டாட்ட காலப்பகுதிகளில் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றி, மதத்தலைவர்களின் வழிகாட்டல்களையும் பின்பற்றி கொண்டாட்டங்களில் ஈடுபடுங்கள்.

வவுனியாவுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்திலும் கைகழுவும் வசதிகள் அல்லது தொற்று நீக்கி மருந்து கட்டாயம் வைப்பதுடன் வர்த்தக நிலையத்தின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் முகக்கவசம் கட்டாயம் அணிந்துகொள்ளுங்கள் என்றும் கோரியுள்ளனர். (கு-18)

# படைப்புழு ஏற்படுத்திய அழிவுகள் மதிப்பீடு



கொழும்பு,டிசெ.21

படைப்புழுவால் சோளப் பயிர்ச்செய்கைக்கு ஏற்பட்டுள்ள அழிவுகள் தொடர்பில், மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகளை விவசாயத் திணைக்களம் எடுத்துள்ளது.

இது தொடர்பில் பிரதேச விவசாய அதிகாரிகளுக்கும், துறைசார் அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கே.வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இதுவரை கிடைத்த தகவல்களின் பிரகாரம் சுமார்10 ஆயிரம் ஹெக்ரேயர் சோளச் செய்கை, படைப்புழுவால் அழிவடைந்துள்ளது.

இம்முறை பெரும்போகத்தில் ஒரு லட்சத்துக்கும் அதிக ஹெக்ரேயர் நிலப்பரப்பில் சோளம் பயிரிடப்பட்டுள்ளது.

சோளச் செய்கைக்கு ஏற்பட்ட அழிவுகளை மதிப்பீடு செய்த பின்னர், விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அண்மையில் ஆலோசனை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# ஹொட்டல்களில் இயங்கும் கொரோனா மருத்துவமனை

கொழும்பு, டிசெ.20

ஹொட்டல்களை சிகிச்சை நிலையங்களாக மாற்றிய பின்னர் தனியார் மருத்துவமனைகளில் இருந்து சிகிச்சை பெற விரும்பும் கொவிட்19 தொற்றாளர்களுக்கு அவ்வாறான ஹொட்டல்களில் சிகிச்சை பெற வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கொவிட் தொற்றாளர்கள் அதிகம் இனங்காணப்பட்டதை அடுத்து மாற்று நடவடிக்கைகளாக நாட்டின் சில மருத்துவமனைகளுக்கு மேலதிகமாக முப்படையினரால் நிர்வகிக்கப்படும் தனிமைப்படுத்தல் மையங்களை, வைத்தியசாலைகள் அல்லது சிகிச்சை நிலையங்களாக மாற்றியுள்ளோம்.

நாட்டில் உள்ள 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொவிட் 19 தொற்றாளர்களில், சுமார் 65 சதவீதமானவர்கள் இடைநிலை சிகிச்சை நிலையங்களில் உள்ளனர்.

ஒரு ஹொட்டலை சரியான முறையில் மருத்துவமனையாக மாற்றவும், அதை ஒரு சிகிச்சை நிலையமாக பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. என்றார். (ஏ-இ)

# விதிமுறைகளை மீறினால் தனிமைப்படுத்தல் நீடிக்கும்

## பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.21

சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் விதிமுறைகளை பொதுமக்கள் பின்பற்றாவிட்டால், சில இடங்களில் தனிமைப்படுத்தல் நீடிக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப்பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோகண எச்சரித்துள்ளார்.

எவரும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியிலிருந்து வெளியேயே செல்ல முடியாது. மீறி எவராவது வெளியேசென்றால்தனிமைப்படுத்தல் சட்டங்களின் கீழ் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

வீடுகளில்தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் வீடுகளில் இருந்து வெளியே செல்ல முடியாது.

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுங்கள். பி.சி.ஆர். சோதனைக்காக மாதிரிகளை வழங்குமாறு கேட்கப்பட்டால் அதற்கு ஒத்துழைப்பை வழங்குங்கள். சுகாதார வழிமுறைகளுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தாதீர்கள்.

விதிமுறைகளை உரிய விதத்தில் பின்பற்றினால் கூடிய விரைவில் தனிமைப்படுத்தல் நீக்கப்படும்.

பொதுமக்கள்அவற்றைக் கடைப்பிடிக்க மறுத்தால், தனிமைப்படுத்தலை மேலும் நீடிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# சோளச்செய்கை பாதிப்பால் திரிபோஷ விநியோகம் தடை

கொழும்பு, டிசெ. 21

கர்ப்பிணிகள், குழந்தைகள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள பிள்ளைகளுக்கு திரிபோஷ விநியோகிக்கும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

சோளப் பயிர்ச்செய்கையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள்காரணமாகதற்போதுதிரிபோஷ உற்பத்தி தடைப்பட்டுள்ளது என்று குடும்ப சுகாதாரபணியகத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சித்திரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார். (கு-இ)

# டெங்கு களப்பணியில் நாம் ஈடுபடுத்தவில்லை

## பிரதேச செயலகம் விளக்கம்



யாழ்ப்பாணம், டிசெ. 21

பலநோக்கு அபிவிருத்திச் செயலணியின் உத்தியோகத்தர்களை டெங்கு ஒழிப்பு பணியில் பிரதேச செயலகம் ஈடுபடுத்தவில்லை என்று சண்டிலிப்பாய்பிரதேசசெயலர் திருமதி உ.யசோதா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம்19ம்திகதி அன்று உதயன் பத்திரிகையின் முதல் பக்கத்தில் சண்டிலிப்பாயில்பெண்ணுக்குதொற்று என்னும் செய்தி வெளியாகியிருந்தது. அதில் அந்தப் பெண்ணுடன் பயிற்சி பெற்ற 52 பணியாளர்களுக்கு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் டெங்கு களப் பணியில் பிரதேசசெயலகத்தால்ஈடுபடுத்தப்பட்டனர் என்றுகுறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் இந்த விடயம் தொடர்பில் சுகாதாரத் தரப்பினருக்கும் பிரதேச செயலகத்தரப்பினருக்கும்இடையில் முரண்பாடு ஏற்பட்டது என்றும் அதில் வெளியாகியிருந்தது.

இது தொடர்பில் விளக்கமளித்துள்ள பிரதேச செயலர், 'டெங்கு ஒழிப்பு பணிக்கு அவர்களை பணியில் ஈடுபடுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களால் எமக்கு தெரியப்படுத்தவில்லை' என்று குறிப்பிட்டுள்ளார். அதேவேளை இவர்களுக்குரிய பயிற்சித் திட்டங்கள் தேசியதொழில்பயிலுநர்அதிகார சபையால் வழங்கப்படுகிறது எனவும் அவர் தனது விளக்கக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினருக்கும் தமக்கும் இடையில் எந்தமுரண்பாடானதொடர்பாடல்களும் இடம்பெறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஓ,5)

# குற்றங்கள் அதிகரிப்பு!: பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.21

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாள்களாக வீடுகளை உடைத்தல் மற்றும் கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளன.

எனவே பண்டிகைக் காலத்தில் தங்க ஆபரணங்கள், பணம் உள்ளிட்ட பெறுமதியான பொருள்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுமாறு பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

வீதிகளில் பயணிக்கும் போது, கைப்பைகள் மற்றும் தங்க ஆபரணங்கள் தொடர்பில் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன் வீடுகளிலிருந்து வெளியேறும் சந்தர்ப்பங்களில் பெறுமதிமிக்க பொருள்களை, வீடுகளிலேயே வைத்துவிட்டு செல்வதைத் தவிர்க்குமாறும் அவர் பொதுமக்களைக் கேட்டுள்ளார். (க-இ)

# அம்பலாந்தோட்டையில் பெண்ணொருவர் கொலை

கொழும்பு, டிசெ. 21

அம்பலாந்தோட்டை, கொடவாய சந்தி பிரதேசத்தில் வீடொன்றில் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான நிலையில் வீட்டில் விழுந்து கிடந்த குறித்த பெண் அம்பலாந்தோட்டை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். 44 வயதுடைய குறித்த பெண் அவரது காதலருடன் குறித்த வீட்டில் வசித்து வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த பெண்ணின் காதலன் பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ம-இ)

## மாகாண சபை முறையை ஒழிப்பதா? இல்லையா?

*கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே தீர்மானம் என்கிறார் அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க*




கொழும்பு, டிசெ.21
கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கும் தீர்மானத்துக்கு அமையவே மாகாண சபை முறையை ஒழிப்பதா? இல்லையா? என்பது தீர்மானிக்கப்படும் என அமைச்சர் சீ. பீ.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கினிகத்தேனை பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அபிவிருத்தி நிகழ்வில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், எம்.சி.சி ஒப்பந்தம் எந்த வடிவத்தில் வந்தாலும், அதில் ஒருபோதும் கைச்சாத்திடப் போவதில்லை 5 வருடங்களில் அபிவிருத்தியின் பலன்களை நாட்டு மக்கள் அனுபவிக்க முடியும். ஒப்பந்தம் எந்த வடிவத்தில் கொண்டு வரப்பட்டாலும் அதில் அரசாங்கம் கைச்சாத்திடாது.

தேசிய பொருளாதார ஊக்குவிப்பை பிரதான மாகக் கொண்ட வரவு செலவுத் திட்டத் தையே நாம் முன்வைத்துள்ளோம். இந்த வரவு செலவுத் திட்டம் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியது.

தற்போதைய நிலையில் கொரோனாவுடன் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதனை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கேகாலை பகுதியில் உருவாக்கப்பட்டுள்ள பாணியையும் கொரோனா ஒழிப்புக்காகவே பயன்படுத்தவுள்ளோம் - என்றார். (ந-இ)

# ஊரடங்கு தொடர்பில் இதுவரை முடிவில்லை

*சவேந்திர சில்வா தெரிவிப்பு*



கொழும்பு, டிசெ.21
பண்டிகைக் காலத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பது தொடர்பிலோ அல்லது தனிமைப்படுத்தல்களை முன்னெடுப்பது தொடர்பிலோ அதிகாரிகள் இதுவரையில் எந்த முடிவும் எடுக்கவில்லை என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

வார இறுதியில் கிடைக்கும் தரவுகளைக் கொண்டே இது தொடர்பில் தீர்மானிக்கப்படும். எனினும் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு தேவைப்பட்டால் எந்த நிமிடத்திலும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம். அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு பொதுமக்கள் ஆதரவு வழங்க வேண்டும். பண்டிகை காலத்தின்போது மேல் மாகாணத்திலிருந்து வெளியேறுவதை மக்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)



## சமுர்த்தி பயனாளிகளுக்கு காசோலைகள்

கொடிகாமம், டிசெ 21
யாழ். மாவட்டத்தில் வீட்டு லொத்தர் கொடுப்பனவுக்கு குலுக்கல் முறையில் தெரிவான சமுர்த்திப் பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கும் நிகழ்வு கடந்த 14ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.


நிகழ்வில் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் மற்றும் சமுர்த்தி திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு தெரிவான முப்பது அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான காசோலைகளை வழங்கினர்.

செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களுக்கான லொத்தர் காசோலைகளே இவ்வாறு வழங்கப்பட்டன. (ச-159)

## அரச ஊழியர்களுக்கான பயிற்சி நெறி ஆரம்பம்

மன்னார்,டிசெ.21
அரச ஊழியர்களின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் தேசிய உற்பத்தி திறன் செயலகம் மற்றும் மன்னார் மாவட்ட செயலகம் ஆகியன இணைந்து 5 நாள்களை கொண்ட சான்றிதழ் பயிற்சி நெறியை ஆரம்பித்துள்ளன. நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட மேலதிக செயலர் சிவபாலன் குணபாலன் தலைமையில் ஆரம்பமான பயிற்சிநெறி எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த பயிற்சிநெறியில் அரச திணைக்களங்களில் இருந்து 50 பேர் பங்குபற்றியிருந்தனர். (ஐ-213)



## நீர்கொழும்பில் கொரோனா தீவிரம்!

கொழும்பு, டிசெ.21
நீர்கொழும்பு பொதுச் சுகாதாரப் பிரிவில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 302 ஆக அதிகரித்துள்ளது.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள தலாதூவ வீடமைப்புத் தொகுதியில் மேலும் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அங்கு இனங்காணப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளது. (றஇ)



"பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்" எனும். தொனிப்பொருளில் இடம்பெற்ற கவிதை கட்டுரை போட்டியில் வெற்றி பெற்றோருக்கான கௌரவிப்பு நிகழ்வு மாந்தை கிழக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ந-19)



சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினர்களுக்கு, உழைக்கும் மகளிர் அமைப்பினரால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ரி5)

## பொலிஸில் மாட்டியது பெருந்தொகை பணம்

கொழும்பு, டிசெ. 21
ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து பெருந்தொகையான பணம் கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

300 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த சந்தேகத்தில் பெண் ஒருவர் உட்பட மூன்று பேர் மாலபை மற்றும் கடுவலை பிரதேசங்களில் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்களிடமிருந்து 5 கோடியே 80 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் எனவும் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)





வவுனியா திருநாவற்குளம் பிள்ளையார் கோயிலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை கஜமுகா சூரன் போர் நடைபெற்றது. (ந-402)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மூடமுடியாத வாய்கள்

அதிகாரம் எப்போதுமே தனக்கெதிரான குரல்களைச் சகிப்பதில்லை. எப்படியாவது அந்தக் குரல் வளைகளை திருகிவிடுவதிலேயே கவனமாக இருப்பதே அதிகாரத் தரப்பின் முதன்மையான வேலை. அதிலும் ராஜபக்சக்களுக்கு ஊடகங்கள் என்றாலே ஒவ்வாமை இன்னும் அதிகம். 2015க்கு முன்னர் ராஜபக்சக்களின் ஆட்சியில் நடந்த அத்தனை அக்கிரமங்களையும், ஊழல்களையும் ஊடகங்கள் வெளிச்சத்துக்கு கொண்டுவந்தன. அதனாலேயே, மஹிந்த ஜனாதிபதித் தேர்தலில் மண் கௌவ, ராஜபக்சக்களின் முதலாம் ஆட்சிக் காலம் முடிவுக்கு வந்திருந்தது. ஆனாலும் தம்முடைய இரண்டாம் ஆட்சிக் காலத்தில் அந்தத் தவறை சரிசெய்து, தமக்கெதிரான குரல்களை மேலெழ விடாமல் செய்யும் காரியங்களில் ராஜபக்சக்கள் இறங்கிவிட்டார்கள்.

ஆனால் கடந்த காலங்களைப் போல அச்சுறுத்தி, கடத்திச் சென்று, உயிர் பறித்து , பெரும் அதிர்வை உண்டுபண்ணாமல் கத்தியின்றி, இரத்தமின்றி காரியம் நடக்கின்றது. ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் மறைமுக அழுத்தங்களைக் கொடுப்பதனூடாக அவர்களின் குரல்களை வலுவிழக்கச் செய்வதோ அல்லது தங்கள் பக்கம் சாயச் செய்வதோ தான் ராஜபக்சக்களின் திட்டம். அந்தத் திட்டத்தில் பல ஊடகங்கள் வீழ்ந்து விட்டன என சொல்லப்படுகின்றது. கடந்த காலங்களில் ராஜபக்சக்களின் அக்கிரமங்களைத் தோலுரித்துக் காட்டிய பல ஊடகவியலாளர்கள், இப்போது அரசின் முகவர்கள் போன்று துதி பாடத் தொடங்கிவிட்டார்கள்.

ஆனால் இன்னொரு புறத்தில் ராஜபக்சக்களுக்கு தலையிடி இருக்கவே செய்கின்றது. சமூக ஊடகங்களே அந்தத் தலையிடி. முன்னைய ஆட்சிக் காலத்தில் மரபார்ந்த ஊடகங்கள் பிடித்திருந்த இடத்தை கடந்த ஒரு தசாப்தத்தில் சமூக ஊடகங்கள் ஆக்கிரமித்து விட்டன. அத்தோடு எந்தவித செலவோ, ஆளணியோ, அனுமதியோ எதுவும் இல்லாமல் கையில் ஒரு அலைபேசி மட்டும் இருந்தால் எல்லோருமே சமூக ஊடகங்களில் உலவமுடியும், கருத்துக்களைப் பதிவிடவோ, பகிரவோ முடியும். கம்பெடுத்தவன் எல்லாம் சண்டியன் என்பது போல, அலைபேசி வைத்திருப்பவன் எல்லாமே சமூக ஊடகன் என்ற நிலை. அதனால் மரபார்ந்த ஊடகங்களைப் போல சமூக ஊடகங்களைக் கண்காணிக்கவோ, கட்டுப்படுத்தவோ,கருத்துப் பகிர்தலை தடை செய்யவோ முடியாத நிலை. இதை ஒரு சிலர் உருமறைப்புச் செய்யப்பட்ட அநாமதேய சமூக வலைத்தளக் கணக்குகள் மூலம் தவறாகப் பயன்படுத்தவும் செய்கின்றனர். ஆனால் அதேவேளையில் மரபார்ந்த ஊடகங்களால் வெளிப்படுத்த முடியாத, செய்யமுடியாத பலவற்றை சமூக ஊடகங்கள் சாதிக்கவே செய்கின்றன.

குறிப்பாக, கண்டி, திகன பகுதியில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் முஸ்லிம் மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் எல்லாவற்றையும் சமூக ஊடகங்கள் மூலமே வெளியுலகுக்கு தெரியப்படுத்த முடிந்திருந்தது. அதே வழியில், ராஜபக்ச அரசின் திருகுதாளங்களையும் சமூகவலைத்தளங்கள் மூலம் பலர் வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளனர். அதனால் மரபார்ந்த ஊடகங்களை விடுத்து, தற்போது தமக்குப் பெரும் தலையிடியாக மாறியுள்ள சமூக ஊடகங்கள் மீதும் அரசின் பார்வை விழுந்துள்ளது. சமூக ஊடகப் பயனாளர்களை பதிவு செய்யவும், அவற்றைக் கட்டுப்படுத்தவும் அரசு ஆலோசித்து வருகின்றது என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

மரபார்ந்த ஊடக கட்டுப்பாடுகளை உடைத்து, மக்களுக்கான ஊடகங்களாக, மாற்று ஊடகங்களாக உலகெங்கும் சமூக வலைத்தளங்கள் உருவெடுத்துள்ள வேளையில், அவற்றை தங்கள் கண்காணிப்பு வளையத்துக்குள் கண்டு வந்து, தமக்கெதிராகச் செயற்படமுடியாத நிலையை உருவாக்க இலங்கை அரசு முனைகின்றது. ஆனால் இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் அப்படி சமூகவலைத்தளங்களின் வாயை மூடுவது அவ்வளவு லேசான காரியமல்ல. ஏதோ ஒரு குறுக்குவழியிலாவது அவை அரசுக்கு எதிரான கருத்துக்களை, உண்மைகளை வெளிப்படுத்த நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. ஊடகங்களின் வாயை மூடினாலும் சமூக வலைத்தளங்களின் வாயை மூடமுடியாதே!

# பலாலி விமான நிலையம் இப்போது திறக்கப்படாது

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

**யாழ்ப்பாணம், டிசெ. 21**
**எதிர்வரும் 26ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையம் சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்படுகின்றது. பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் உள்ளிட்ட ஏனைய விமான நிலையங்கள் திறப்பது தொடர்பில் அடுத்த மாதம் நடுப் பகுதியிலேயே ஆராயப்படும்.**

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஏற்கனவே இயங்கிக் கொண்டிருந்த கட்டுநாயக்க விமான நிலையம் எதிர்வரும் 26ஆம் திகதி முதல் சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்படவுள்ளது.
ஏனைய விமான நிலையங்கள் இப்போது திறக்கப்படாது.
அவை திறக்கப்படுவது தொடர்பில் அடுத்த மாத நடுப்பகுதியில்தான் ஆராயப்படும், என்றார். (ஒ,5,22)

## இலங்கையர்கள் நாடு திரும்ப வெளிவிவகார அமைச்சின் அனுமதி தேவையில்லை

கொழும்பு, டிசெ. 21
இலங்கையர்கள் தமது தாயகம் திரும்புவதற்கு வெளிவிவகார அமைச்சின் அனுமதியை இனி பெற்றுக்கொள்ளத் தேவையில்லை என்று சிவில் விமான போக்குவரத்து ஆணையகத்தின் தலைவர் உபாலி தர்மதாச தெரிவித்தார்.
எதிர்வரும் 26ஆம் திகதி இலங்கையின் விமான நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.
இந்தமுறையில் வரும் இலங்கையர்கள் பி.சி.ஆர். சோதனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஒரு நாளைக்கு அதிகபட்சம் 3 ஆயிரத்து 500 பேருக்கு வாய்ப்பு வழங்கப்படும். என்றும் அவர் கூறினார்.
(ஒ.இ)

## ரூ.10 லட்சத்தில் வீதி சீரமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 21
வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட வைத்தியர் திருமதி இந்திராணி தர்மராஜா வீதி ரூபா 10 லட்சம் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணத்தில் மாகாண ஆயுள்வேத பணிப்பாளராக பணியாற்றிய அவர், ஓய்வுபெற்ற பின்னர் பல்வேறு சேவைகளில் ஈடுபட்டார். அவருக்கு மதிப்பளிக்கும் வகையில் பிரான்பற்று பிரதான வீதியுடன் இணையும் ஒழுங்கைக்கு அவருடைய பெயர் வைக்கப்பட்டது. இந்த வீதியே சீரமைக்கப்பட்டுள்ளது. (த-50)



## மலத்தியோன் என்றுகூறி கோதுமை மா விற்பனை

*வவுனியாவில் சிலர் ஏமாற்றுவேலை*

வவுனியா, டிசெ. 21
மலத்தியோன் கிருமிநாசினி என்றுகூறி வவுனியா பண்டாரிக்குளம் உட்பட பல பகுதிகளில் வர்த்தக நிலையங்களுக்கு கோதுமை மா விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
முச்சக்கரவண்டியில் வந்த சிலர் தம்மை மலத்தியோன் கிருமிநாசினி விநியோகஸ்தர்கள் என அடையாளம் காட்டி மலத்தியோன் கிருமி நாசினிகளை குறைந்த விலையில் வர்த்தக நிலையங்களுக்கு விநியோகம் செய்துவருகின்றோம் என 10 கிலோகிராம் மலத்தியோன் கிருமிநாசினி என்றுகூறி 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளனர்.
அவர்கள் சென்றபின்னர், பொதியைத் திறந்து பார்த்தபோதே கோதுமை மாவில் சிறிதளவு மலத்தியோன் கிருமிநாசினி கலந்துள்ளமை தெரியவந்துள்ளது.
அந்தப் பொதிகளை விற்பனை செய்த நபர்களின் உருவங்கள் மற்றும் முச்சக்கரவண்டி இலக்கம் என்பன வர்த்தக நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வியில் பதிவாகியுள்ளன. இதுபோன்ற பல சம்பவங்கள் வவுனியா மாவட்டத்தில் சில மாதங்களுக்கு முன்னரும் இடம்பெற்றிருந்தன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-18)

# தடுப்பூசி வாங்குவதற்கு 10 பில். டொலர்கள் கடன்

கொழும்பு, டிசெ. 21
கொரோனா பெருந்தொற்றுக்கான தடுப்பூசி வாங்குவதற்காக 10 பில்லியன் டொலர்களை கடனாக உலக வங்கியிடம் கோரியுள்ளது இலங்கை. கொழும்பு ஊடகமொன்றுக்கு அரச உயர் அதிகாரியொருவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.
ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனமான உலக சுகாதார அமைப்பும் ஒரு சர்வதேச முயற்சியின் கீழ் இலங்கை மக்கள் தொகையில் 20 சதவீதத்தினருக்கு தடுப்பூசி வழங்கப்படும் என்று அறிவித்துள்ள நிலையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.
ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றிலிருந்து நிதியுதவி பெறுவதற்கான சாத்தியக்கூறுகளையும் அரசாங்கம் எதிர்பார்க்கிறது. (ம-இ)

# சமூக ஊடகப் பாவனைக்கு வருகின்றது கட்டுப்பாடு!

### கோத்தாபய அரசு ஆலோசனை

**கொழும்பு, டிசெ.21**
**நாட்டில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோரைப் பதிவு செய்வதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என்று வெகுஜன ஊட கத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோர் மத்தியில் சுயக்கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும் என்று அமைச்சர் தெரிவித்தார்.
இது தொடர்பில், கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
மேலும், முகப்புத்தகம் உள்ளிட்ட அனைத்து சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோரையும் பதிவு செய்யவேண்டும்.
பதிவு செய்வதற்கான வேலைத்திட்டம் ஒன்றை நாம் எமது அமைச்சில் தயாரித்துள்ளோம்.
சமூக ஊடகங்களுக்கு மாத்திரமே இதனை நாம் தற்பொழுது தயாரித்துள்ளோம். சுயகட்டுப்பாடு தொடர்பில் கடந்த 2010 ஆம் ஆண்டு அமைச்சராக இருந்த போது இதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளேன்.
பலமுறை பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளேன். இன்றும் இது தொடர்பான பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறவுள்ளது. இது முடிவடைந்த பின்னர் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (ற-இ)



## வவுனியா நகர சபையிடம் சிக்கின 125 கட்டாக்காலிகள்

வவுனியா, டிசெ. 21
வவுனியாவில் நேற்றுமுன்தினம் இரவு 4 மணித்தியாலங்களில் நகர சபையினர் 125 கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து அடைத்துள்ளனர்.
வவுனியா நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நகரின் அழகு கால்நடைகளால் சீர்குலைவதுடன் போக்குவரத்துக்கும் இடைஞ்சல்கள் ஏற்பட்டு வருகின்றன.
நத்தார் பண்டிகை மற்றும் புதுவருடப்பிறப்பு தினங்களில் நகரில் அதிகரிக்கும் வாகன நெரிசலால் கட்டாக்காலி மாடுகளால் ஏற்படும் போக்குவரத்து இடைஞ்சல் மற்றும் விபத்துக்களைக் குறைக்கும் வகையில் அந்த மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன.
வவுனியா நகர், பட்டாணிச்சூர், வேப்பங்குளம், கோவிற்குளம், குருமன்காடு, வைரவப்புளியங்குளம் ஆகிய பகுதிகளில் இவை பிடிக்கப்பட்டன என்று நகர சபையினர் தெரிவித்தனர்.
அவை வவுனியா நகரசபை வளாகத்திலும், வேப்பங்குளம் நகரசபை வளாகத்திலும் அடைக்கப்பட்டுள்ளன.
மாட்டின் உரிமையாளர்கள் பிடிகூலி 600ரூபா, தண்டம் 1000 ரூபா, நாள் ஒன்றுக்கான பராமரிப்பு செலவு 300 ரூபா ஆகியனவற்றைச் செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும் என்று நகர சபையினர் தெரிவித்தனர். (து-18)

## அடுத்த ஆண்டு நாட்டில் மூன்று பெரிய முதலீடுகள்

கொழும்பு, டிசெ.21
புதிய தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தும் மூன்று வெளிநாட்டு முதலீடு திட்டங்கள் அடுத்த ஆண்டு நாட்டுக்கு கிடைக்க வுள்ளன என இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.
பெரியளவிலான இந்த மூன்று திட்டங்களினூடாக நாட்டுக்கு 550 பில்லியன் ரூபா கிடைக்கவுள்ளதுடன், சுமார் ஒரு லட்சம் தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். துறைமுக நகரில் சர்வதேச மாநாட்டு மண்டபம், அம்பாந்தோட்டை தொழிற்பேட்டையின் இறப்பர் உற்பத்தி தொழிற்சாலை மற்றும் மருந்து உற்பத்தி நிலையம் என்பனவே இந்த மூன்று நிகழ்ச்சித் திட்டங்களாகும். (வ-இ)

## தொற்றாளர்கள் எங்கும் இருக்கலாம் சுகாதார விதிகளைப் பின்பற்றுங்கள்

### சுகாதார அமைச்சு வேண்டுகோள்

கொழும்பு, டிசெ.21
கொரோனாத் தொற்றாளர்கள் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் இருக்கக்கூடும்.
எனவே சுகாதார ஒழுங்கு விதிகளை கட்டாயம் பின்பற்றுங் கள் என சுகாதார அமைச்சு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளதாவது,
மேல் மாகாணம் அபாய வலயமாக அடையாளப்படுத்தப்பட்டாலும், நாட்டின் ஏனைய சில பகுதிகளில் சிறு சிறு கொத்தணிகள் இனங்காணப்பட்டுள்ளன.
கொழும்பிலிருந்து பெரும்பாலானவர்கள் வெளி மாவட்டங்களுக்கு சென்றுள்ளதால், அவர்களும் உரிய பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். இதனால் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சுகாதார விதிகள் உரிய முறையில் பின்பற்றப்படுதல் அவசியம். இல்லையெனில் மீண்டும் கொரோனாக் கொத்தணிகள் ஏற்படும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## கொழும்பு முதியோர் இல்லத்தில் 42 பேர் கொரோனாவின் பிடியில்

கொழும்பு , டிசெ.21
கொழும்பு முகத்துவாரம் பகுதியிலுள்ள முதியோர் இல்லமொன்றில் 42 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த முதியோர் இல்லத்தில் அண்மையில் உயிரிழந்த ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.
அதையடுத்து அங்குள்ள 98 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் மேலும் 45 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அந்தப் பகுதிக்கான சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (வ-இ)




மன்னார் மாவட்டத்தில் அடம்பன் பகுதியை சேர்ந்த அங்கவீனமுற்ற ஒருவருக்கு ஜீவ ஊற்று அன்பின் கரம் ஊடாக கடந்த புதன்கிழமை சக்கர நாற்காலி வழங்கட்டது. இதற்கான நிதியை நெநர்லாந்து மிசன் மெயில் நிறுவனத்தினர் வழங்கினர். (ரி5-222)

## சிறுவர்களை வெளியில் அழைத்துச் செல்லாதீர்

கொழும்பு,டிசெ.21
பண்டிகைக் காலத்தில் சிறுவர்களை தேவையற்ற விதத்தில் வெளியில் அழைத்துச் செல்ல வேண்டாம் என்று சீமாட்டி மருத்துவமனையின் பணிப்பாளர் ஜீ. விஜேசூரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.
கொரோனா தொற்றுக்குள்ளான 70 சிறுவர்கள் இந்த மருத்துவமனையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் தற்போது வெவ்வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.
சிகிச்சைக்காக வருபவர்கள் வீண் பயத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம்.
சிறுவர்களுக்கு ஏதாவது நோய் அறிகுறிகள் காணப்படுமாயின், விரைவாக அருகிலிருக்கும் மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லுங்கள் என்றும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார். (க-இ)

## அரசு விலையை அதிகரித்ததால் போத்தல் 'கள்' விற்பனை வீழ்ச்சி

### நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

வலி.தென்மேற்கு, டிசெ. 21
போத்தல் கள் விலை அதிகரித்துள்ளதால் அதன் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டு தவறணைகளில் போத்தல் கள் தேங்கிக் கிடக்கின்றது. போத்தலில் கள் அடைப்பதற்கான வரியை அரசு அதிகரித்ததே இந்த நிலைக்குக் காரணம்.
இதனால் தொழிலாளர்களுக்கு மட்டுமன்றி சங்கங்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே வரியைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலிகாமம் கொத்தணி தலைவர் எஸ்.செல்வராஜா கோரியுள்ளார்.
பனம் கள் உற்பத்தி குறைவான காலப்பகுதிகளில் மதுப்பிரியர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பனம் கள் அதிகமாக கிடைக்கும் காலப்பகுதியில் குடாநாட்டில் உள்ள 14 தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள் போத்தல்களில் கள் அடைப்பதில் ஈடுபட்டு வருகின்றன. ஒரு வருடத்தில் மட்டும் சுமார் 20 லட்சம் போத்தல் கள் அடைக்கப்படுகின்றது. சொரி கள் இல்லாத காலப்பகுதியில் சங்கங்களின் கீழுள்ள தவறணைகளில் அவை விற்கப்படுகின்றன.
இந்தநிலையில் அரசு வரியை அதிகரித்துள்ளதால் போத்தல் கள் விலையையும் அதிகரிக்க வேண்டிய நிலை சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ளது.
போத்தலில் அடைக்கப்பட்ட கள் ஒரு போத்தல் 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதால் மதுப்பிரியர்கள் சாராயம், பியர் போன்றனவற்றை அருந்துவதில் ஈடுபட்டுள்ளார்கள். இதுவே போத்தல் கள் விற்பனை வீழ்ச்சி அடைந்ததற்குக் காரணம். இந்தச் சிக்கலுக்கு வடக்கிலுள்ள அரசியல்வாதிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (து-115)

# மீண்டும் தத்திகளின் தாக்கம்; உடனேயே கட்டுப்படுத்துங்கள்

## விவசாய திணைக்களப் பணிப்பாளர் அறிவுறுத்து

அச்சுவேலி, டிசெ.21

யாழ்.மாவட்டத்தில் கடும் மழையுடன் கூடிய காலநிலை முரண்பாட்டால் நெற்பயிர்களில் 'கபில மற்றும் வெண் முதுகுத் தண்டு தத்திகளின் தாக்குதல் மீண்டும் தலைதூக்கியுள்ளது. நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தமது நெற்பயிர்களை அவதானித்து கபில மற்றும் வெண் முதுகுத் தண்டு தத்தியின் பரவல் காணப்படும் இடத்து தமது பிரதேச விவசாய போதனாசிரியர்களுடன் அல்லது திருநெல்வேலியில் உள்ள விவசாயத் திணைக்களத்துடன் தொடர்கொண்டு உடனடியாக தத்தியின் தாக்குதலைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லாவிடில் நெல் விளைச் சலில் பெரும்பாதிப்பு ஏற்படும் என யாழ்.மாவட்ட விவசாய திணைக்களப் பணிப்பாளர் திருமதி அஞ்சலாதேவி ஸ்ரீரங்கன் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தத்தியின் தாக்கத்தோடு இலை மடிச்சுக்கட்டி, இலை மடல் வெளிறல், எரிபந்தம் போன்ற நோய்களும் நெற்பயிர்களில் தற்பொழுது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. மறவன்புலவு, தனங்களப்பு, சரசாலை, புத்தூர் கிழக்கு, நவாலி, சங்கரத்தை ஆகிய இடங்களில் உள்ள வயல்களில் கபில மற்றும் வெண் முதுகுத் தண்டு தத்திகளின் தாக்கம் பெருமளவு காணப்படுகின்றன. அந்த வயல் உரிமையாளர்கள் உடனடியாக தமது பிரதேச விவசாய போதனாசிரியர்கள் அல்லது மாவட்ட விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு நோய்த் தாக்கத்துக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள கிருமி நாசிகளை உரிய வேளையில் தெளித்து நெற்பயிர்களில் ஏற்பட்டுள்ள நோய்த் தாக்கதை இல்லாமல் செய்து நெல் விளைச்சலை அதிகரிக்கச் செய்ய வேண்டும் - என்றார். (பு-11)

# மக்களின் உயிர் பாதுகாப்பு வீ.அ.அ.சபையினுடையதே

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.21

குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறையிலிருந்து அனலைதீவு மற்றும் எழுவைதீவு, காரைநகரிலிருந்து ஊர்காவற்றுறை ஆகிய வறுக்கான பாதைச் சேவையின்போது மக்களின் உயிர்ப் பாதுகாப்பு என்பது முழுமையாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தானதாகும் என வடக்கு மாகாண ஆளுநர் பிஎஸ்.எம். சார்ஸ்ஸ் கூறினார் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். குடாநாட்டின் தீவக பிரதேசங்களில் கடல் மார்க்கமாகப் பயணிக்கும் சகல படகுகளும் முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் பின்னர் பயணிகள் போக்குவரத்துக்கு ஆபத்தற்றவை என்ற அரச சான்றிதழ் பெற்ற படகுகள் மட்டுமே போக்குவரத்துச் செய்வதற்கான அனுமதியை வீதி அபிவிருத்தி அதிகாரசபை வழங்கும். உடன் அமுழுக்கு வரும் வகையில் இதனை நடைமுறைப்படுத்துமாறு ஆளுநர் கூறியுள்ளார். அத்துடன் குறி கட்டுவான், காரைநகர், ஊர்காவற்றுறை, அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு இறங்கு துறைகளை மறுசீரமைப்பு செய்வதற்குத் தேவையான வரைபடம், முழுமையான பொறியியல் மதிப்பீடு, முன்மொழிவு பத்திரங்கள் அடங்கிய விடயத்தை உடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை வழங்கவேண்டும் என்றும் ஆளுநர் கூறியுள்ளார் என்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (ப)

# ஜனாஸா எரிப்புக்கு எதிராக நீதிமன்றில் ரிட் மனுத்தாக்கல்

கொழும்பு, டிசெ.21

**கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் ஜனாஸாக்களை தகனம் செய்யும் நடவடிக்கைக்கு தொடர்ந்தும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தலையில் காயத்துக்குள்ளாகிய நிலையில் ஒருவர் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தார்.**

இவ்வாறு உயிரிழந்தவரை கொவிட் - 19 தொற்றால் உயிரிழந்துள்ளார் எனக் கூறி பலவந்தமாக எரித்தமைக்கு எதிராக அவரது மகன் மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தெஹிவளை, களுபோவில பகுதியைச் சேர்ந்த எம்.ஆர்.எம். நிபால் என்பவரே இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் அரசமைப்பின் 140 ஆவது அத்தியாயத்துக்கு அமைவாக, ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதற்கு உடனடியாக தடை உத்தரவை பிறப்பிக்கக் கோரி இந்த ரிட் மனு சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா ஊடாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில் சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், இராணுவத் தளபதி, பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தமது வீட்டில் எவருக்கும் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்படாத நிலையில், தந்தைக்கு மாத்திரம் கொவிட் உள்ளது எனக் கூறி ஜனாஸாவைத் தகனம் செய்துள்ளனர் என்று மனுதாரர் சுட்டிக் காட்டியுள்ளார்.

குறித்த ரிட் மனு எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதிபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அன்றைய தினம் விடயங்களை முன்வைக்க பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்பவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ற-இ)

# யப்னா ஸ்ரலியன்ஸ் அணியின் யாழ்.வீரர்களுக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 21

லங்கா பிரிமியர் லீக் போட்டிகளில் வடக்கு மாகாணம் சார்பில் யப்னா ஸ்ரலியன்ஸ் அணிக்காகப் பங்கு கொண்ட வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

யூறா நிறுவன அனுசரணையுடன் யாழ்ப்பாண துடுப்பாட்ட சங்க ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி அரியாலையிலுள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட ஆட்களுடன் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

வாகனத் தொடரணி மூலம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்ட வீரர்கள் மேள வாத்தியம் முழங்க நிகழ்வு இடத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

இதன்போது வியாஸ்காந்த், கபில்ராஜ், டினோசன், விஜேராஜ் ஆகிய வீரர்களும் இவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்ட ரதீபனும் கௌரவிக்கப்பட்டனர். (து-20)





# வெள்ளத்திலும் வியாபாரம்

சாவகச்சேரி டிசெ.21

சாவகச்சேரி பொதுச்சந்தை வியாபாரிகள் வீதியோரத்தில் மழை வெள்ளத்தின் மத்தியில் வியாபாரத்தை மேற்கொண்டுள்ளனர்.

சாவகச்சேரி பொதுச்சந்தை மூடப்பட்டு மரக்கறி வியாபாரிகளுக்கு கச்சாய் வீதியில் தண்டவாளத்துக்கு அருகில் வியாபாரம் செய்ய நகர சபையால் அனுமதி வழங்கப்பட்டது. மழைகாலம் என்பதால் வியாபாரிகள், தகரப் பந்தல்களைத் தற்காலிகமாக அமைத்து வியாபாரத்தை மேற்கொண்டுள்ளனர். எனினும் வியாபார நிலையங்களைச் சுற்றி வெள்ளம் காணப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)




மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வு கழகத்தினரால் பெற்றோரை இழந்த 50 மாணவர்களுக்கு 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ஐ-213)

# குளிரூட்டியில் ஜனாஸாவை வைப்பதற்குப் பரிசீலனை!



கொழும்பு, டிசெ. 21

கொரோனாவால் உயிரிழந்த முஸ்லீம்களின் ஜனாஸாக்களை குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் வைப்பது குறித்த திட்டமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன ஆங்கில இணையத்தளமொன்றிற்குத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொறுக்குள்ளான வர்களின் ஜனாஸாவை நீண்டகாலம் ஏனையவர்களின் உடல்களுடன் உடற்கூற்றுப் பரிசோதனை அறையில் வைத்திருக்க முடியாது என்பதாலேயே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். ஐந்து இடங்களில் இவ்வாறான குளிரூட்டப்பட்ட கொள்கலன்களை பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ம-இ)

# 2021 உங்கள் ராசிக்கு எப்படி?

## ஆங்கிலப் புத்தாண்டு பலன்கள்




இன்னும் சிறிது நாள்களில் கடக்க இருக்கும் 2020 ஆம் ஆண்டின் முடிவுக்காக எம்மில் பலரும் ஆர்வ மாகக் காத்துக்கொண்டிருக்கிறோம். இந்த வருடம் போல் எப்போதும் உலக மக்கள் துயரத்தைச் சந்தித் திருக்கமாட்டார்கள். 2020ஆம் ஆண்டைக் கடக்க இருக்கும் நிலையில், வர இருக்கும் புதிய 2021 ஆம் ஆண்டைப் பற்றிய பயமும் தொற்றிக் கொண்டுள் ளது. இந்த ஆண்டாவது உலக மக்களுக்கு சுபீட்சத் தைத் தருமா? என்கிற எதிர்பார்ப்பு ஒவ்வொரு வருக்கும் அதிகமாகவே இருக்கிறது என்று கூறலாம். அவ்வகையில் வர இருக்கும் 2021ஆம் ஆண்டுக் கான பலன்கள் இங்கு தரப்படுகின்றன.

2020 முடியும் நிலையில் அடுத்து வரும் 2021ஆம் ஆண்டு கடக ராசிக்காரர்களுக்கு எப்படி இருக்கும்? என்பதை தான் இந்த பதிவின் மூலம் பார்க்க இருக் கிறோம். சனி பகவான் ஏழாம் வீட்டிலும், ராகு மற்றும் கேது முறையே ஐந்து மற்றும் மூன்றாவது வீட்டிலும் இருப்பார்கள். ஆண்டின் தொடக்கத்தில் செவ்வாய் கிரகம் பத்தாவது வீட்டிலும், பின்பு அடுத்தடுத்த வீடு களிலும் பெயர்ச்சி ஆகிறார்.

இந்த கிரக அமைப்பில் இருப்பதால் உங்கள் ராசிக்கு தொழில் மற்றும் வியாபாரம் தொடர்பான விஷயங் களில் அதிர்ஷ்டம் உண்டாகப் போகிறது. குடும்பம்: குடும்பத்தைப் பொறுத்தவரை கடக ராசிக்காரர்கள் நிறைய சவால்களை எதிர் கொள்வீர்கள்.

சனி பகவானுடைய பார்வை உங்களது ராசியில் இருந்து நான்காவது வீட்டை நோக்கி இருப்பதால், குடும்பத்தில் அடிக்கடி பிரச்சினைகள் மற்றும் சண்டை சச்சரவுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு. சிறு விஷயத்தை கூட, வாக்குவாதங்கள் செய்து, பேசிப் பேசியே பெரிதாக்கி விடுவார்கள். கூடு மானவரை வாக்குவாதங்களைத் தவிர்த்து, விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. செவ்வாய் பகவானுடைய பார்வையும் நான்காம் வீட் டில் இருப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சிக் குறைவு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று இல்லாமல் மற்றவர் களின் கருத்துக்களுக்கும் முன்னுரிமை கொடுத்தால் நல்லது நடக்கும்.

### வியாபாரம் மற்றும் தொழில்:

தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல முன்னேற்ற மும், சிறப்பான வேலை வாய்ப்பும் அமையலாம். ஆண்டின் தொடக்கத்திலும் மற்றும் இறுதியிலும் அனுகூலமான பலன்களை கொடுத்தாலும், நடுப்ப குதியில் இருக்கும் ஏப்ரல் முதல் செப்ரெம்பர் வரை யிலான காலம் சற்று ஏற்ற இறக்கத்துடன் காணப்ப டும். இதுவரை உங்களுக்கு இருந்து வந்த போட்டி, பொறாமைகள் குறைந்து முன்னேற்றத்துக்கு நல்ல வழி கிடைக்கும். புதிய முதலீடுகள் செய்து அதிக லாபங்களை காண்பீர்கள்.

### உத்தியோகம்:

உத்தியோக ரீதியான விஷயத்தில் அதிகம் நிதானத்துடன் இருக்க வேண்டிய காலமாக அமை யும். பணியில் இருப்பவர்களுக்கு கிரகங்கள் சாதக மற்ற நிலையில் இருப்பதால் கவனம் தேவை. ஆண் டின் தொடக்கத்தில் சுமூகமாகச் சென்றாலும், பின்வ ரும் காலங்களில் வம்பு வழக்குகளையும், வாய்த் தகராறுகளையும் எதிர்கொள்வதற்கான சாத்தியக்கூ றுகள் உண்டு. வீண் பழியைச் சுமப்பதற்கு சந்தர்ப் பங்கள் அமையலாம். எனவே எச்சரிக்கையுடன் செயலாற்றுவது மிகவும் நல்லது. எதிர்பார்க்கும் சலு கைகள் கிடைப்பதில் காலதாமதம் உண்டாகும்.

### பொருளாதாரம்:

பொருளாதார ரீதியான முன்னேற்றம் சிறப்பாக இருக் கும். அதிகம் வரும் பணத்தை எல்லாம் பத்திரப்படுத்தி வைக்காமல் உபயோகமான விஷயங்களைச் செய் வதும், வங்கிகளில் சேமித்து செய்து வைப்பதும், வீடு, மனை போன்ற அசையா சொத்துக்களை வாங்குவ தும் நல்ல பலன் தரும். அரசாங்கத் துறையில் வர வேண்டிய பலன்களும் அனுகூலமாக இருக்கும். நிலுவையில் இருக்கும் கடன்கள் படிப்படியாகக் குறைந்து விடும்.

### பெண்களுக்கு:

கடக ராசியில் பிறந்த பெண்களுக்கு எதிர்பார்த்த சுப காரியங்கள் கைகூடி வரும். மனதுக்கு பிடித்தவர்களை மணம் முடிக்கும் வாய்ப்புகள் உண்டாகும். எதிலும் போராட்டத்தை சந்தித்த பின் தான் வெற்றி கிடைக்கும். போராடுவதற்கு முதலில் மனோதிடத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். கணவன், மனைவிக்கு இடையே இருக்கும் வெறுப்புகள் நீங்கி பரஸ்பர ஒற்றுமை நீடிக்க திட்டம் தீட்டுவீர்கள். நண்பர்களின் ஆதரவு பக்கபல மாக இருக்கும்.

### பரிகாரம்:


கணபதியை வழிபட்டு வர நன்மைகள் பிறக்கும். செவ்வாய்க்கிழமை தோறும் கோவிலுக்குச் சென்று செவ்வாய் பகவானுக்கு சிவப்பு நிற மலர்களைச் சாற்றி, வழிபாடுகள் செய்து வரவும். சிவப்பு நிற தானி யங்களை தானம் செய்தால் யோகம் பெறலாம்.

---

வாரம் ஓர் ஆசனம்

# பார்ஸ்வத கோணாசனம்

'பார்ஸ்வ' என்றால் பக்கவாட்டு என்றும் 'கோண' என்றால் கோணவடிவு என்றும் பொருள் கொண்டால் (உடல்) பக்கவாட்டான கோணவடிவையொத்த ஆசனம் இதுவாகும்.



**செய்முறை :**

1. உடல் ஒரே நேர்கோட்டில் இருக்குமாறு (தடாசனத்தில்) நிற்கவும். (ஆரம்ப நிலை)
2. மூச்சை இழுத்துக்கொண்டு வலக்காலை இடக்காலிலிருந்து 3 அடி வரை இடைவெளி விட்டு நிற்கவும். இரு பாதங்களும் ஒன்றுக்கொன்று சமாந்தரமாக இருக்க வேண்டும்.
3. உடலைத்திருப்பாது வலது பாதத்தை மட்டும் வலப்புறம் 90 பாகை அளவுக்கு திருப்பவும்.
4. மூச்சை வெளிவிட்டுக்கொண்டு வலப்புறம் உடலைத் திருப்பி முன்புறம் வளைந்து வலக் கையை வலப்பாதத்துக்கு அருகில் ஊன்றி வலது முழங்காலை மடித்து வயிறு, நெஞ்சுப் பகுதிகளின் வலப்பகுதி வலது மேற்தொடையுடன் அழுத்தப்பட்டிருக்க வேண்டும். இடது கால் பின்புறமாக நீட்டியபடி நேராக இருக்க வேண்டும்.
5. மூச்சை வெளிவிட்டவாறு இடதுகையை உயர்த்தி தலைக்கு முன்பாக இடக்காதைத் தொடு மாறு நீட்டியபடி பார்வையை இடக்கை விரல்களின் மீது இருக்குமாறு வைத்து ஆழமாக சுவாசிக்கவும். - உச்சநிலை
6. பின்னர் மூச்சை உள்ளிழுத்தவாறு இடக்கையை பின்புறம் கொண்டுவந்து நாரிப்பகுதியில் வைக்கவும்.
7. மெதுவாக மூச்சை உள்ளிழுத்தவாறு கால்களை அசைக்காமல் நிமிரவும்.
8. மூச்சை வெளிவிட்ட வண்ணம் காலை பழைய நிலைக்குத் திருப்பவும். (90 பாகையிலிருந்து)
9. மூச்சை வெளிவிட்ட வண்ணம் வலக்காலை இடது காலுக்கருகில் கொணர்ந்து தடாசனத்தில் நிற்கவும்.

குறிப்பு : இதே போல் மாற்றுப் பயிற்சியாக மறுபுறமும் செய்க.

### பயன்கள்

மார்புத் தசைகள் நன்கு உறுதிபெற்று விரிவடைகின்றன. கெண் டைக்கால் தசைகள், கணுக்கால்கள், முழங்கால்கள், மணிக்கட் டுக்கள், தோள்மூட்டுக்கள், தொடைத்தசைகள், தசை நார்கள் மற்றும் நரம்புகள் தளர்த்தப்பட்டு வலிமை பெறுகின்றன. பொது வான உடல் பலவீனத்தை அகற்றி உடல் ஊக்கம் பலம் பெறும். சுவாசக்கோளாறுகள், கண், காது கோளாறுகள் நீங்கும். நீரி ழிவு, மலச்சிக்கல், ஜீரணக் குறைபாடுகள் மற்றும் கால் வலிகள் முதலியன குணமாகும். வயிற்றுப்புறத் தசைகள், இருதயச் சுவர் கள், வால்வுகள், இருதயத் தசைகள், நாடி நாளங்கள் வலிமை பெறுகின்றன. அவற்றின் செயற்பாடுகளும் அதிகரிக்கும்.

ஸ்ரீ. நதிபரன் (யோகா போதனாசிரியர்)

# அடக்குமுறையைத் தொடர்ந்தால் அரசாங்கத்துக்கு ஆப்பு நிச்சயம்!

## எச்சரிக்கின்றது ஐ.ம.ச.

**கொழும்பு, டிசெ.21**

**“உலகில் ஏகாதிபத்திய வழியில் ஆட்சியை முன்னெடுத்த அரசாங்கங்களுக்கு உலக வரலாறு வழங்கியுள்ள தண்டனையை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கமும் மீட்டல் செய்து பார்க்க வேண்டும். அதேபோல் மக்களையும், எதிர்க்கட்சிகளையும் அடக்கி ஆளமுற்பட்டால் மாபெரும் அரசியல் பூகம்பங்களை எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரிடலாம்.” என ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை விடுத்துள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

மேலும் , “ஜனநாயக ஆட்சி முறைமையில் கருத்து சுதந்திரம் மூலம், பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும். அதற்கான சூழ்நிலையை ஆட்சியாளர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மாறாக அடக்குமுறைகளை கையாளக்கூடாது. நாடாளுமன்றத்தில் தேர்தலை நடத்துவது மாத்திரம் ஜனநாயகம் அல்ல.

தேர்தலின் பின்னர் கூட மக்களுக்கு சுதந்திரமாக கருத்து வெளியிடவும், எதிரான நிலைப்பாடுகளை கொண்டிருப்பதற்கான சுதந்திரமும் இருக்க வேண்டும்.

சிறப்பாக செயற்பட்டால்கூட சில நேரங்களில் தவறுகள் இழைக்கப்படலாம். அதனை மக்கள் சுட்டிக்காட்டும் போது அதனை கௌரவமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.” எனத் தெரிவித்தார். (ரி5-44)





# முல்லைத்தீவில் வயல் விழா

முல்லைத்தீவு, டிசெ.21

முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாய திணைக்களத்தின் வயல் விழாவும் வேளாண் பொருள் விற்பனை நிலைய திறப்பு விழாவும் ஒட்டுசுட்டான் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் உகநாதன் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது.

இந் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் மற்றும் வடமாகாண விவசாய திணைக்கள பணிப்பாளர் எஸ்.சிவகுமார் ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொண்டனர். தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு மிளகாய் விதைகளும் பெரிய வெங்காய விதைகளும் வழங்கப்பட்டன. (ந-222)

# அதிசொகுசு பஸ் சேவை அடுத்த ஆண்டு ஆரம்பம்

கொழும்பு, டிசெ.21

கொழும்பு நகரில் அதிசொகுசு பஸ் சேவையை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்க பயணிகள் போக்குவரத்து இராஜாங்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

பார்க் ‘அன்ட் ரைட்’ எனும் புதிய பெயரில் இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். அதற்கமைய, முதற்கட்டமாக 25 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளன.

மொரட்டுவை மற்றும் மாகும்புற தொடக்கம் கொழும்பு நகர் வரை இந்த சேவை முன்னெடுக்கப்படவுள்ளது. இதைப் பயன்படுத்துவோரின் தனிப்பட்ட வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான பிரத்தியேக தரிப்பிடங்களும் வழங்கப்படவுள்ளன என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (வ-இ)




சமத்துவக் கட்சியின் இளைஞர் அணியினர், கட்சியின் கிளிநொச்சி தலைமை அலுவலகத்தில் குருதித் தானம் வழங்கினர். (க-214)

# கடந்த 17 நாள்களில் 7,479 பேர் விடுதலை

கொழும்பு, டிசெ.21

கடந்த 17 நாள்களில் 7 ஆயிரத்து 479 பேர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 6 ஆயிரத்து 915 பேர் சந்தேகநபர்கள் எனவும் ஏனையோர் சிறைத்தண்டனை பெற்றவர்கள் எனவும் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியைக் குறைக்கும் நோக்கில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் திட்டத்தின் கீழ், இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சிறைக்கைதிகளில் மேலும் 74 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இதனடிப்படையில், சிறைச்சாலை கொத்தணியுடன் தொடர்புடைய 3 ஆயிரத்து 372 தொற்றாளர்கள் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர் என திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (வ-இ)

# பாடசாலைகள் இன்று திறப்பு

வவுனியா, டிசெ. 21

வவுனியாவில் கொரோனாத் தொற்றுடன் மாணவர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் தற்காலிகமாக மூடப்பட்ட பாடசாலைகள் நாளை முதல் மீண்டும் செயற்படும் என்று வலய கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கமைவாக வவுனியா தெற்கு வலயக்கல்வி திணைக்களத்துக்கு உட்பட்ட 5 பாடசாலைகளும் மூடப்பட்டிருந்தன. இந்த நிலையில் சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பிரகாரம் இன்று திங்கட்கிழமை முதல் அவற்றைத் திறந்து கல்விச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வுள்ளன, என்றார். (ஒ.110)

# கொரோனாத் தொற்றைத் தடுக்க காலியில் மோட்டார் படையணி

காலி, டிசெ.21

காலி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றைத் தடுக்க 10 மோட்டார் சைக்கிள்களைக் கொண்ட ஒரு படையணி நிறுவப்பட்டுள்ளது எனத் தெற்கு மாகாண சபையின் தலைமைச் செயலாளர் ஆர்.சி.டி சொய்சா தெரிவித்துள்ளார்.

**குழு தேவையின்றி கூட்டம் கூடுதல், தேவையற்ற பயணங்களை மேற்கொள்ளுதல் மற்றும் சுகாதார விதிகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றைக் கண்காணிக்கவுள்ளது.**

மேலும் எழுமாற்றாக மக்களின் உடல் வெப்பநிலையையும் எழுந்தமானமாக பரிசோதிக்கும்.

இந்த மோட்டார் சைக்கிள் அணிக்கு தேவையான செலவுகள் தெற்கு மாகாண சபையால் வழங்கப்படும் **என்றும் தலைமைச் செயலாளர் தெரிவித்தார். (ந-இ)**

# நிவாரண உதவி வழங்கல்

சாவகச்சேரி, டிசெ. 21

சரசாலை காளி கோவில் ஆலய அறப்பணி நிதியத்தினூடாக வெள்ள நிவாரண உதவிகள் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

இந்தப் பகுதியில் வெள்ளத்தால் அவதியுற்ற மக்களின் வேண்டுகோளுக்கமைய வீடுகளில் மழை ஒழுக்கைத் தடுப்பதற்காகவும், வீட்டின் உட்புறத்தில் ஏற்படும் நிலநீர்க்கசிவைத் தடுப்பதற்காகவும் இருபது குடும்பங்களுக்கு தறப்பாள்கள் வழங்கப்பட்டன. மேலும் 10 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகளும் வழங்கப்பட்டன. (ரி5-159)

### ஓமந்தை அரச வீட்டுத் திட்டத்தில்

# பயன்படுத்தாத காணிகளை பறிமுதல் செய்யப் பணிப்பு!



**வவுனியா, டிசெ.21**
**ஓமந்தையில் அரச ஊழியர்களுக்காக வழங்கப்பட்ட காணிகளில், இதுவரை குடியமராத காணிகள் அனைத்தையும் மீளப் பெற்று காணிகள் அற்றோருக்கு வழங்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் உத்தர விட்டுள்ளார்.**

வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றும் காணி அற்ற 600க்கும் மேற்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு 2019ஆம் ஆண்டு ஓமந்தையில் காணியுடன் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது. எனினும் 80 பேர் வரையானோரே அந்தப் பகுதியில் குடியேறியுள்ளனர். ஏனையோர் தமக்கு வழங்கப்பட்ட காணிகளுக்கு எந்த அபிவிருத்தியையும் முன்னெடுக்கவில்லை. அதனால் அந்தப் பகுதி பற்றைக்காடாக மாறியுள்ளது. அதைப் போன்று வவுனியாவின் ஏனைய பகுதிகளிலும் அரசின் வீட்டுத் திட்டங்களைப் பெற்ற மக்கள், அங்கு குடியமராத நிலைமையே காணப்படுகின்றது.

நேற்று நடந்த வவுனியா ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்பட்டது.

அங்கு கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர், இதுவரை குடியமராத காணிகளின் உரிமங்களை இரத்துச் செய்து, அறிவித்தல்களை ஒட்டவேண்டும் என்றும், அந்தக் காணிகளை, காத்திருப்போர் பட்டியலில் உள்ள காணி அற்றோருக்கு வழங்கவேண்டும் என்று பணித்தார்.

முதற்கட்டமாக, ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தில் எந்த அபிவிருத்தியும் மேற்கொள்ளாத 140 பேரின் காணிகளுக்கு இன்று திங்கட்கிழமை இரத்து அறிவித்தல் பத்திரம் ஒட்டப்படவுள்ளது என்று வவுனியா பிரதேச செயலர் ந.கமலதாசன் தெரிவித்தார்.

மாவட்டத்தின் 4 பிரதேச செயலர் பிரிவுகளிலும் இப்படியான வீடுகள், காணிகள் இருந்தால் அவை அனைத்தையும் உடனடியாக இரத்துச் செய்து காணி அற்றோருக்கு வழங்க வேண்டும் என்றும் வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். (எ-110)

## ஒரே குடும்பத்தில் 4 பேருக்கு தொற்று

கொழும்பு, டிசெ.21

ஹோமாகம, பிடிபன பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேருக்கு கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களுடன் தொடர்புடையவர்கள் என இனங்காணப்பட்ட 15 குடும்பங்களைச் சேர்ந்த 50 பேரை தனிமைப்படுத்த சுகாதாரப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் தொற்றாளர்களில் ஒருவர் பிடிபன பாடசாலை சந்திப் பிரதேசத்தில் அமைந்துள்ள பேக்கரி ஒன்றில் பணிபுரிந்து வந்துள்ளார். இதனால் அந்தப் பேக்கரியில் உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொண்ட நபர்களை இனங்காணும் நடவடிக்கையை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் முன்னெடுத்துள்ளனர். (ந-இ)

## மத்திய மாகாணத்தில் '1000'தொட்டது தொற்று!



கண்டி, டிசெ.21

மத்திய மாகாணத்தில் மாத்திரம் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 190 ஆக அதிகரித்துள்ளது. மத்திய மாகாணத்தில் நேற்று காலை வரையில் 47 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கண்டியில் 37, நுவரெலியா வில் 4, மாத்தளையில் 6 தொற்றாளர்கள் இவ்வாறு புதிதாக இனங்காணப்பட்டுள்ளனர். மத்திய மாகாணத்தில் கண்டியிலேயே அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கண்டியில் இதுவரையில் 765 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். (ந-இ)

## நூல் நிலையக் கட்டடத்தை நூதனசாலையாக மாற்றவும்

### கோருகின்றது பிரஜைகள் குழு

தலைமன்னார், டிசெ. 21

மன்னார் நகர சபைக்கு உட்பட்ட மன்னார் நகர மத்தியில் அமைந்துள்ள முன்னைய நூல் நிலையக் கட்டடத்தை நூதனசாலையாக மாற்றியமைக்க வேண்டும் என்று மன்னார் பிரஜைகள் குழு கோருகின்றது. இதுபற்றி நகர சபையிடம் கோரிக்கை முன்வைப்பது என்றும் மன்னார் பிரஜைகள் குழு, தனது ஆளுநர் சபையில் தீர்மானித்துள்ளது.

மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக இயங்கிவந்த மன்னார் நூலகம் வேறொரு கட்டடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

அதனால் அந்தக் கட்டடம் தனியார் வர்த்தகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டடத்திலேயே நூதனசாலை அமைக்க குழு திட்டமிடுகின்றது. (த-60)

## சர்வதேச புலம்பெயர் தொழிலாளர் தினம்

### கிளிநொச்சியில் கடைப்பிடிப்பு

கிளிநொச்சி,டிசெ.21

சர்வதேச புலம்பெயர் தொழிலாளர் தினம் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் கடைப்பிடிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள புலம்பெயர் தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் "எங்கள் குரலை கேளுங்கள்" எனும் தொனிப்பொருளில் இத்தினம் கடைப்பிடிக்கப்பட்டது. இதன்போது புலம்பெயர் தொழிலாளர் சங்கத்தால் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சர்வதேச தொழிலாளர்களின் பாதுகாக்கப்பட வேண்டிய உரிமைகள் தொடர்பான மனு ஒன்று கிளிநொச்சி மாவட்டச் செயலருக்கு வழங்கும் வகையில் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.சுப்ரமணியத்திடம் கையளிக்கப்பட்டது. (ஐ)




## அன்டிஜென் சோதனை 2 வாரங்கள் நீடிப்பு!!




கொழும்பு, டிசெ.21

மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் நபர்களுக்காக முன்னெடுக்கப்பட்ட அன்டிஜென் பரிசோதனையை, மேலும் இரண்டு வாரங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்துக்கு வெளியே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தப் பரிசோதனை முன்னெடுக் கப்பட்டுள்ளது. எனவே மக்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

## மலையக பல்கலைக்கு இடம் நிதி ஒதுக்கீடு

### குறைகூறியோர் இப்போது மௌனம் என்கிறார் ஜீவன்

கொழும்பு, டிசெ.21

மலையக பல்கலைக்கழகத்துக்கான இடமும் அதற்குத் தேவையான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் மலையகத்துக்கு பல்கலைக்கழகம் வரவில்லை என விமர்சித்தவர்கள் தற்போது வாய் மூடி மௌனம் காக்கின்றனர் என்றும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். கொட்டகலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொட்டகலையில் கடந்த 4 வருடங்களாக அபிவிருத்திகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அபிவிருத்திகளை மேற்கொண்டால் அதன் பெயர் தொண்டமானுக்கு சென்றுவிடும் என்ற அச்சமே இதற்குக் காரணம்.

தற்போது மலையக பல்கலைக்கழகத்துக்கான இடமும் அதற்கு தேவையான பணமும் ஒதுக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகம் வரவில்லை என விமர்சித்த வர்கள் ஏன் இப்போது வாழ்த்த மறுக்கின்றனர் - என்றார். (ந-இ)

## காலி கல்வி வலயத்தில் பாடசாலைகளுக்கு பூட்டு

காலி, டிசெ.21

காலி கல்வி வலயத்துக்குட்பட்ட சகல பாடசாலைகளையும் தொடர்ந்து மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என, தென் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரஞ்சித் யாப்பா தெரிவித்துள்ளார்.

இக் கல்வி வலயத்துக்குட்பட்ட 23 பாடசாலைகள் தற்போது மூடப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ள அவர், ஜனவரி மாதம் முதல் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்க திட்டமி டப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (ந-இ)



# தொலைக்கல்வியும் கண்களின் பாதுகாப்பும்



கண் சத்திரசிகிச்சை வல்லுநர்
முத்துசாமி மலரவன்

மடிக்கணினி, அலைபேசி உள்ளிட்ட சாதனங்களில் சூம், ஸ்கைப் உள்ளிட்ட மென்பொருள்களில் நேரலை காணொலி ஊடாக மாணவர்கள் நீண்ட நேரம் கல்வி கற்பதனால், கண்களின் பார்வைப் பாதிப்பு ஏற்படும். 20 நிமிடங்களுக்கு ஒருமுறை இடைவெளி விட்டு, அவற்றில் பாடநெறியைத் தொடரவேண்டும் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

ஆனால் நவீன தொலைத் தொடர்பு சாதனங்களின் திரைகளைப் (Device Screen) பார்த்த வண்ணம் மாணவர்கள் கல்வி கற்பதனால், கண்களுக்கு பார்வைப் பாதிப்பு ஏற்படாது. மாணவர்கள் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளாலேயே கண்களுக்கும், மூளைக்கும் அசௌகரியங்கள் ஏற்படும்.

### தவறான தகவல்

நவீன சாதனங்களின் திரைகளில் கல்வி கற்பதனால் மாணவர்களின் கண்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற தவறான, விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படாத இவ்வாறான தகவல்களை வெளியிடுவதன் ஊடாக, அச்சம் காரணமாக மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கும். வடக்கு கிழக்கு மாகாணங்களின் கல்வி நிலை பின்தங்கிச் செல்லும் நிலையில் இவ்வாறான தகவல்களும் இன்னும் பாதிப்பை ஏற்படுத்தி விடும்.

தற்போதைய உலக ஒழுங்கில் நவீன சாதனங்களின் திரைகளைப் பார்த்து, கல்வி கற்பதற்கும் பணிகளை மேற்கொள்வதற்குப் பழக்கப்படுத்திக் கொண்டுள்ளோம். அதுவும் தற்போது உலகில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 தொற்று நோய் காரணமாக மாணவர்களின் கல்வி நவீன தொலைத் தொடர்பு சாதனங்களில் தான் இடம்பெறுகின்றன. இந்த நடைமுறை தொடரப் போகின்றது.

எனவே நவீன சாதனங்களின் திரைகளைத் தொடர்ந்து பயன்படுத்தி வருவதனால், கண்கள் பாதிக்கும் என்ற கருத்தை உருவாக்கினால் அது மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும். அவற்றைப் பயன்படுத்துவதனால் கண்கள் பாதிக்கும் என்ற விஞ்ஞான ரீதியான எந்தத் தகவலும் இல்லை. ஆனால் நவீன தொலைத் தொடர்பு சாதனங்களை மாணவர்கள் பயன்படுத்தும் முறையில் கண்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படும். அதாவது கண்கள் எரிவு, வலி, தலையிடி போன்ற அசௌகரியங்கள் இருக்கும்.


### கண்களை மூடித் திறக்கவேண்டும்

நவீன தொலைத்தொடர்பு சாதனங்களின் திரைகளில் கல்வி கற்கும் போதும், பணிகளில் ஈடுபடும் போதும் ஒவ்வொரு 5 நிமிடங்களுக்கு ஒருமுறை கண்களை ஒரு விநாடி மூடித் திறக்கவேண்டும். அதாவது சாதாரணமாக எமது கண்கள் மணிக்கு 12 தொடக்கம் 15 முறை எம்மை அறியாமல் மூடித் திறக்கின்றன. அதனால் கண்கள் சரியாக இயங்குவதற்கான சக்தி கிடைக்கின்றது.

ஆனால் சாதனங்களின் திரையை நாம் தொடர்ச்சியாக அருகாமையில் வைத்து குறும் பார்வையில் பார்ப்பதனால் கண்கள் மூடித் திறப்பது இல்லாமல் போகின்றது. அதனாலேயே சாதனங்களின் திரைகளில் கல்வி கற்கும் போது அல்லது பணியில் ஈடுபடும் போது ஒவ்வொரு 5 நிமிடங்களுக்கு ஒரு முறை கண்களை மூடித் திறக்க வேண்டும்.

### தூரப் பார்வை

நவீன தொலைத்தொடர்பு சாதனங்களின் திரைகளில் கல்வி கற்கும் போதும், பணிகளில் ஈடுபடும் போதும் ஒவ்வொரு 20 நிமிடங்களுக்கு ஒரு முறை கண்களை சுமார் 20 அடி தூரத்துக்காவது தூரப் பார்வை செலுத்த வேண்டும். அல்லது கண்களை மூடிவிட்டுத் திறக்கலாம். அதனால் கண்கள் குறும் பார்வையில் தொடர்ச்சியாக இருப்பதிலிருந்து விடுபடும்.




ஃப்ளோரா விளக்குகளின் ஒளித் தெறிப்பு நவீன சாதனங்களைப் பயன்படுத்தும் போது ஃப்ளோரா மின்குமிழ்களின் வெளிச்சம் திரைகளில் பட்டு தெறிப்பு ஏற்படுவதால், கண்களுக்கு கூச்சம் ஏற்படுகின்றது. அதனாலும் கண்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுகின்றது. ஆகவே மின்குமிழ்களுக்கு நேராக சாதனத்தின் திரையை வைத்துப் பயன்படுத்துவதனால் கண்கள் கூச்சம் உள்ளிட்ட அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றன. எனவே மின்குமிழ்களின் வெளிச்சத்துக்கு எதிர்மாறாக சாதனங்களைப் பயன்படுத்து அவசியமாகின்றது.

### இருக்கைகளில் இருக்கும் விதம்

சாதனங்களைப் பயன்படுத்தும் போது ஆசனங்களில் சரியான முறையில் இருக்க வேண்டும். நிமிர்ந்து கால்களை இலகுவாக விட்டு இருப்பதனால் கண்களுக்கும், மூளைக்கும் சௌகரியமாக அமையும்.

இவ்வாறு நான்கு நடைமுறைகளையும் சீராக பின்பற்றுபவர்களின் கண்களுக்கு எந்தவொரு அசௌகரியங்களும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

சரியான முறைகளில் சாதனங்களைப் பயன்படுத்தும் போதும், சிலருக்கு தலையிடி உள்ளிட்ட சில அசௌகரியங்கள் 5 சதவீதத்தினருக்கு ஏற்படலாம். அவ்வாறானவர்கள் கண் மருத்துவரிடம் ஆலோசனையைப் பெற்று மூக்குக் கண்ணாடி பயன்படுத்துவது அல்லது முறையான கண் பயிற்சிகளைச் செய்வது நிவாரணமாக அமையும். கண் வறட்சி உள்ளிட்ட பிரச்சினைகள் இருக்கும் போது மருத்துவரால் பரிந்துரைக்கப்படும் செயற்கை கண்ணீரைப் பயன்படுத்துவதன் ஊடாகவும் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.




### சில நடைமுறைகள்

ஆசிரியர்கள், மாணவர்களுக்கு பாட நேர அட்டவணை ஒதுக்கீடு செய்யும் போது, ஒவ்வொரு பாடத்துக்கும் 40 நிமிடங்களை (உயர்தர மாணவர்களாயின் 45 60 நிமிடங்கள்) வழங்குவதுடன் 10 தொடக்கம் 20 நிமிடங்கள் இடைவேளையும் வழங்குவது அவசியம். அந்த இடைவேளையின் போது, மாணவர்கள் தூரப் பார்வை செயற்பாட்டுக்கு இடமளிக்கப்பட வேண்டும்.

இது தொடர்பில் நடைமுறைகளை அறிமுகப்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

அதன்மூலம் மாணவர்களுக்கு கண்கள் மற்றும் மூளைக்கு ஏற்படும் அசௌகரியங்கள் நீங்கும். இந்த ஒழுங்குமுறையை பெற்றோர்களும் கண்காணிக்க வேண்டும்.

### வெளிப்புறச் செயற்பாடுகளில் ஈடுபடல் அவசியம்

பிள்ளைகள் வீட்டுக்குள்ளேயே தொடர்ச்சியாக இருக்க அனுமதிக்காது வெளிப்புறச் செயற்பாடுகளிலும் கட்டாயம் ஈடுபடுத்த வேண்டும். மைதானங்களில் விளையாடுவது, சூரிய ஒளி உள்ள வேளைகளில் வெளிப்புறங்களில் உடற்பயிற்சி உள்ளிட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் கண்களின் தூரப் பார்வை பாதிப்புகள் ஏற்படாது தவிர்க்க முடியும்.

குறைந்தது தினமும் ஒரு மணி நேரம் பிள்ளைகள் மட்டுமல்லாமல் அனைவரும் வெளிபுறச் செயற்பாடுகளில் ஈடுபடுவது அவசியம். வீட்டுக்குள் அல்லது அலுவலகத்துக்குள் இருந்து பணியாற்றுவதனால் தொடர்ச்சியான குறும் பார்வையே இடம்பெறுகிறது. அதனாலேயே வெளிப்புறச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் தூரப் பார்வை கண்களுக்குக் கிடைக்கிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒவ்வொரு வீட்டு வளாகத்திலேயே வெளிப்புறச் செயற்பாடுகளுக்கு தேவையான இடவசதிகள் உண்டு.

இலங்கையில் இளம் பராயத்தினர் (முன்பள்ளி, பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள்) 100 பேரில் 7 தொடக்கம் 10 பேர் மூக்குக் கண்ணாடி பயன்படுத்துபவராக உள்ளனர். அவர்களுக்கு கண் நோய் இல்லை. எனினும் தூரப் பார்வைக்காக அவர்கள் அதனைப் பயன்படுத்துகின்றனர்.

கொவிட் 19 நோயால் வீடுகளுக்குள் முடங்கிக் கிடப்பதனால் இந்த சதவிகிதம் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனாலேயே வெளிப்புறச் செயற்பாடுகளில் ஈடுபடுவது அவசியமாகின்றது என்பதை வலியுறுத்துகின்றோம்.

கண்களுக்கு ஏற்படும் அசௌகரிகளுக்கு மருந்துகள் இல்லை. தேவை ஏற்படியின் கண்ணாடி அணிவது அல்லது மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படும் கண்களுக்கான பயிற்சிகளின் ஊடாகவே அவற்றிலிருந்து விடுபட முடியும்.

40 வயதுக்கு மேற்பட்டவர்கள் சாதனங்களின் திரைகளில் அதிக நேரம் பணியாற்றுவதனால் குறும் பார்வை பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அவர்கள் மருத்துவரின் ஆலோசனைக்கு அமைய மூக்குக் கண்ணாடி அணிந்து கொள்வதனால் தலையிடி போன்ற அசௌகரியங்கள் கண்களுக்கு ஏற்படாது.

# எதிர்பார்க்காத பிரதேசங்களில் உப கொத்தணிகள் உருவாகும்


## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.21
எதிர்பார்க்காத பிரதேசங்களில் கொரோனா வைரஸ் தொற்றின், உப கொத்தணிகள் உருவாகும் ஆபத்து துரிதமாக அதிகரித்துள்ளது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கம் எச்சரித்துள்ளது.
காலி, இரத்தினபுரி, வெலிகம, ஹற்றன், பதியபெல்ல, ஹிரிபிட்டிய, யாழ்ப்பாணம், மொனராகலை, படல்கும்புர, அட்டாளைச்சேனை மற்றும் மலையக பகுதிகளில் இந்த உப கொத்தணிகள் உருவாகி வருகின்றன என்று சங்கத்தின் செயலாளர் மகேந்திர பால சூரிய தெரிவித்துள்ளார்.
இதனைத்தவிர தொழில்சார்ந்த மட்டங்களிலும் கொரோனா பரவுவது அதிகரித்துள்ளது. பொலிஸ், துறைமுகம், சிறைச்சாலைகள், சுகாதாரத் துறை ஆகியவற்றிலும் தற்போது உப கொத்தணிகள் அதிகரித்து வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# சுயாதீன விசாரணைகோரி பிரான்ஸில் கவனவீர்ப்பு



கொழும்பு, டிசெ. 21
பிரான்ஸ் நாடாளுமன்றம் முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.
ஐக்கிய நாடுகள் அவையின் 46 ஆவது மனித உரிமைகள் ஆணையகத்தின் கூட்டத் தொடரில், சிங்கள பேரினவாத அரசுக்கு கால நீடிப்பு கொடுக்கும் சதி வேலைகளில் விலைபோன தமிழ் தரப்புக்கள் ஈடுபட்டுள்ளமையைத் தடுத்து நிறுத்தக் கோரியும் தமிழினப் படுகொலைக்கு அனைத்துலக சுயாதீன விசாரணை கோரியும் அவற்றுக்கு பிரான்ஸ் நாட்டு உதவியைக் கோரியும் போராட்டம் நடத்தப்பட்டது.
போராட்டத்துக்கு பிரான்ஸ் நாடாளுமன்றில் உள்ள தமிழ் மக்கள் ஆய்வுக் குழு முழு ஆதரவு வழங்கியிருந்தது. தமிழினப் படுகொலைக்கு அனைத்துலக சுயாதீன விசாரணையை வலியுறுத்தி பிரான்ஸ் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அழுத்தம் கொடுக்கின்றோம் தமிழ் மக்கள் ஆய்வுக் குழு போராட்டக் காரர்களிடம் உறுதி வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (கு-இ)



# வீதி மின்விளக்குகள் பொருத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 21
வலி. மேற்கில் மின்விளக்குகள் இல்லாதுள்ள வீதிகளுக்கு மின் ஒளிரச்செய்து பாதுபாப்பான போக்குவரத்துக்கு உதவ வேண்டும் என்று கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.
இது பற்றி வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் த.நடனேந்திரன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்கினேஸ்வரனுக்கு 30 மில்லியன் ரூபா கேட்டு கடிதம் எழுதியுள்ளார். (து-50)

# ஆயிரம் ரூபா கிடைக்காவிட்டால் நாடளாவிய ரீதியில் போராட்டம்!

## தோட்டத் தொழிலாளர்கள் மத்திய நிலைய இணை அமைப்பாளர் அரசுக்கு எச்சரிக்கை

கண்டி, டிசெ. 21
எதிர்வரும் ஜனவரியில் தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்கப்படாவிட்டால் பெரியளவில் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று தோட்டத் தொழிலாளர்கள் மத்திய நிலையத்தின் இணை அமைப்பாளர் பிரபாகர் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை 2014ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்டது. அதன்பின்னர் இந்த நாட்டில் 2 ஜனாதிபதி தேர்தல்கள், 2 பொதுத்தேர்தல்கள், ஒரு உள்ளாட்சிமன்றத் தேர்தல் என்பன நடந்து முடிந்துள்ளன. அப்போதெல்லாம் ஆயிரம் ரூபா கோஷம் எழுந்தது. தேர்தல் காலங்களில் திட்டமிட்ட அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டனர். ஜனவரியில் இந்தத் தொகை கிடைக்கவிட்டால் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்படும் - என்றார். (ம)




# சடலங்கள் எரிப்பதை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

கொழும்பு,டிசெ.21
கொரோனாத் தொற்றால் மரணிக்கும் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் உடல்களை எரிப்பதை நிறுத்தக் கோரி . நுரைச்சோலை நகரில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
குழந்தையின் ஜனாஸா மாதிரி ஒன்றையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் பார்வைக்காக வைத்திருந்தனர்.
அமைதியான முறையில் கைகளில் பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
முகக்கவசங்கள் அணிந்து, தனிநபர் இடைவெளிகளைப் பேணியவாறு, சுகாதார முறையைப் பின்பற்றி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். (க-இ)

# சிலரைத் தனிமைப்படுத்தும்போது அதிகாரத்தரப்பால் அழுத்தங்கள்

## கிளி. சுகாதாரப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு




கிளிநொச்சி டிச 21
சிலரை தனிமைப்படுத்தும்போது அழுத்தங்களை கொழும்பில் இருந்தும் உள்ளூரிலிருந்தும் நாம் அழுத்தங்களை எதிர்கொள்கின்றோம் என்று கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இடம்பெற்றது இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மேல் மாகாணத்தில் இருந்து வருபவர்கள் கட்டாயம் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுகின்றனர். அவ்வாறு சிலரை தனிமைப்படுத்திய தும் அவர்களை தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்குமாறு மத்திய அரசில் இருந்தும் இங்கிருந்தும் சிலர் அழுத்தங்களை வழங்குகின்றனர். இதனால் எமது கடமைகளை சரிவரச் செய்யமுடியாதுள்ளது - என்றார்.
அப்போது குறுக்கிட்ட மாகாண சுகாதார பணிப்பாளர், அரச அதிகாரிகள் கடமையின் நிமித்தம் கொழும்புக்குச் சென்றுவந்தால் அவர்கள் தனிமைப்படுத்தப்படத் தேவையில்லை. ஆனால் ஏனையவர்கள் கட்டாயம் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்றார். (ம-6)

# ஐரோப்பிய நிலைமை உருவானால் ஆபத்து!

## மக்களிடமிருந்து ஒத்துழைப்பை கோருகிறது சுகாதார அமைச்சு

கொழும்பு,டிசெம்பர்.20
பொதுமக்களின் நடத்தை அடிப்படையிலேயே எதிர்காலம் தீர்மானிக்கப்படும். சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றி மக்கள் பொறுப்புடன் செயற்படாவிட்டால் கொரோனா வைரஸ் பரவல் எமது கட்டுப்பாட்டை மீறி, ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட நிலைமை இலங்கையிலும் உருவாகக்கூடும். இவ்வாறு தொற்று நோய் ஆய்வு பிரிவின் பணிப்பாளர் சிறப்பு மருத்துவர் சுதத் சமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது
வழமையாக டிசெம்பரில் இறுதி இரு வாரங்களிலும், ஜனவரி முதல் வாரத்திலுமே நாட்டில் அனைத்து பகுதிகளிலும் மக்கள் நடமாட்டம் அதிகமாக காணப்படும். மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ள வேண்டிய காலப்பகுதி இதுவாகும்.
முக்கியமாக மேல் மாகாணத்திலும், கொழும்பு மாநகர எல்லையிலும் கொரோனா வைரஸ் வேகமாக பரவிவருகின்றது. அந்தப் பகுதிகளில் இருந்து வெளியிடங்களுக்கு சென்றால், அவ்வாறு செல்பவர்களில் எவருக்காவது வைரஸ் தொற்று இருந்தால் அவர்கள் செல்லும் பகுதிகளிலும் கொரோனா கொத்தணிகள் உருவாகக்கூடிய அபாயம் இருக்கின்றது.
ஒத்துழைப்பு கிடைக்காவிட்டால் வைரஸ் பரவல் என்பது எமது கட்டுப்பாட்டைமீறி மேற்குலகம் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பரவியது போல வேகமாக பரவக்கூடும் என்றார். (எ-44)



# இன்றைய நாள்

**மேடம்:** உங்களின் பணிச்சுமையை உடன் பணிபுரிபவர்கள் பகிர்ந்து கொள்வர். உறவினர்களால் சிறு சிக்கல் உண்டாகி அது இன்றைக்கே நீங்கும். உடல் நலனில் சிறிதளவேனும் கவனம் கொள்வது நல்லது.

**இடபம்:** பிரச்சினைகளை நண்பர்களுடன் பகிர்ந்து, தீர்வு காண்பீர்கள். மனத்திடம் கூடும். எதையும் சாதிக்கும் திறமை உண்டாகும். சிலருக்கு வீட்டிலிருந்து வெளியில் தங்கும் சூழல் ஏற்படும்.

**மிதுனம்:** எடுத்த பணியைச் செய்யும் போது சிறிய தடுமாற்றம் ஏற்படும். உங்களது திறமையால் பணிகளைச் செய்து முடித்து மகிழ்வீர்கள். பண வரவு எதிர்பார்த்தபடி இருக்கும்.

**கடகம்:** பிறரால் ஏமாறும் சூழல் ஏற்படலாம். வாக்குவாதம் வேண்டாம். புதிய முயற்சிகள் வேண்டாம். பகைவர்களை மன்னிப்பது நல்லது. வியாபார முன்னேற்றம் உண்டு. நேற்றைய கவலை தீரும்.

**சிம்மம்:** நிதி நிலை சீராக இருக்கும். கடன் பாக்கிகள் சிறிதளவு வசூலாகும். எதிர்பாலினத்தைச் சேர்ந்த புதிய நண்பர்கள் வாழ்வில் வருவார்கள். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும்.

**கன்னி:** சமூகத்தில் உங்களின் செல்வாக்கும், மதிப்பும் உயரும். பண வரவு கூடும். திறமைக்கேற்ப பலன் பெறுவீர்கள். பொதுப்பணிகளில் ஈடுபாடு வரும். நிர்வாகத்திறமை வெளிப்படும்.

**துலாம்:** திட்டமிட்ட சுபநிகழ்ச்சிகளில் சில சிறிய குறுக்கீடுகள் வந்து விலகும். ஒன்றுக்கு மேற்பட்ட வகைகளில் வருமானம் கிடைக்கும். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள் பயம் நீங்கும்.

**விருச்சிகம்:** முன்னேற்றத்தில் இருந்து வந்த தடை நீங்கி நம்பிக்கை வரும். வாழ்க்கை வசதிகள் கூடும். எதிர்ப்புக்கள் பல இருந்தாலும் அவற்றைச் சமாளித்து மீளுவீர்கள்.

**தனுசு:** விழிப்புணர்வு அவசியம். யாரையும் நம்பாமல் இருப்பது நல்லது. வழக்கு, விவகாரங்களை இப்போதைக்கு தள்ளி வையுங்கள். வியாபாரிகள் வாகனம் ஓட்டும்போது கவனமாக இருக்கவும்.

**மகரம்:** தகுதியற்றவர்களுடன் கொண்டிருந்த நட்பை விலக்கிக்கொள்வீர்கள். பணி யாளருக்கு நீண்ட நாளாக எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கலாம்.

**கும்பம்:** சம்பள உயர்வும் வரலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். கணவன் மனைவி இடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கும்.

**மீனம்:** பிள்ளைகளுக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொடுப்பீர்கள். பெண்கள் அக்கம் பக்கத்தினரிடம் கவனமாக பேசுவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும்.

# பொருளாதார விருத்திக்கே பட்ஜெட்டில் முன்னுரிமை



பதுளை, டிசெ.21

**அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கொரோனாத் தொற்றால் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.**

பதுளை ஊவா பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று சுற்றுலாத்துறை வர்த்தகம் வீழ்ச்சியடைந்துள்ளது. வெளிநாட்டில் தொழில்புரிபவர்களிடமிருந்து மாத்திரமே வெளிநாட்டு பணம் எமக்கு கிடைத்தது. கொரோனாவால் வெளிநாட்டு நன்கொடைகளும் கிடைப்பதில்லை. அதே வேளை அரசாங்கத்தின் கடன் பெறும் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டுக்கு வரும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை 14 நாள்கள் தனிமைப்படுத்த வேண்டியுள்ளது. இந்நிலையிலும் கடந்த மாதம் புதிய தொழிற்சாலையை ஆரம்பித்தோம். செப்ரெம்பர் மாதத்தில் பில்லியன் டொலர் பெறுமதிக்கும் அதிகமான ஏற்றுமதி வருவாயை ஈட்ட முடிந்தது. இதனால் நம் நாட்டுக்கான எரிபொருள் மற்றும் ஔடத இறக்குமதிக்கு தடை ஏற்படவில்லை. இவ்வாறான சூழ்நிலையிலேயே 2021 வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டது. வரவு- செலவுத் திட்டத்தின் ஊடாக கிராமப்புற அபிவிருத்தி அடை யாளம் காணப்பட்டுள்ளது - என்றார். (வ-இ)



## பருத்தித்துறையில் 42 பேருக்கு பி.சி.ஆர்.

பருத்தித்துறை, டிசெ.21

பருத்தித்துறை சுகாதார திணைக்களத்தினர் பருத்தித்துறை பொதுச்சந்தை மற்றும் அந்தப் பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டவர்களிடம் எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனைகளை நேற்று முன்தினம் சந்தைக் கட்டடத்தில் நடத்தினர்.

இதன்போது 42 பேரிடம் மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ற-9,159)

## பாடசாலை கூரைக்கு குரங்குகளால் சேதம்



வவுனியா, டிசெ.21

வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய வளாகத்தினுள் பிரவேசிக்கும் குரங்குகளால் பாடசாலைக் கூரைகள் சேதமடைந்துள்ளன.

பாடசாலையின் வகுப்பறைக் கூரைகளை குரங்குகள் உடைத்துச் சேதப்படுத்துகின்றன. இதனால் மழைகாலத்தில் இந்தக் கூரைத் துவாரத்தினூடாக மழை நீர் உட்புகுவதால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. இதேவேளை மாணவர்களை விரட்டும் செயற்பாட்டிலும் குரங்குகள் ஈடுபட்டு வருகின்றன. (ற-402)

## தென்னை மரத்தைத் தறிக்க இனிமேல் அனுமதியில்லை!

*அருந்திக்க பெர்னாண்டோ தெரிவிப்பு*



கொழும்பு, டிசெ.21

இலங்கையில் தென்னை மரங்களைத் தறிப்பது மற்றும் தென்னம் காணிகளைத் துண்டாடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் தென்னைமரங்களைத் தறிப்பதற்கு அரசின் அனுமதியைப் பெற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சிலாபம் பகுதியில் நடந்த நிகழ்வொன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்களுக்குத் தேவையான அளவு தென்னை உற்பத்தி இடம்பெறுகின்ற நிலையிலும், தேங்காய்களை தொழிற்சாலை களுக்கு வழங்குவதால் தேங்காய் விலை அதிகரித்துச் செல்கிறது.

தேங்காய் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுத்தாலும் அதை ஓரளவே கட்டுப்படுத்த முடிகிறது.

இந்த பிரச்சினைக்குத் தீர்வாக வெளிநாடுகளிலிருந்து சிறு அளவில் தேங்காயைக் கொள்வனவு செய்வது மற்றும் குளிரூட்டப்பட்ட தேங்காய் துரு வலைப் பெற்றுக் கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்ட நிலையில் அதற்கான அனுமதியும் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த நிலையில் தென்னை மரங்களைத் தறிப்பதற்கு அரசு தடைவிதித்துள்ளது - என்றார். (ற-இ)

## தென்மராட்சி சந்தைகளில் எவருக்கும் தொற்றில்லை

சாவகச்சேரி, டிசெ.21

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரால் சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் சந்தைகளில் நடத்திய எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனையில் பங்குபற்றிய 84 பேருக்கும் தொற்றில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மருதனார்மடம் சந்தையில் கொரோனாத் தொற்றா ளர்கள் கண்டுபிடிக்கப் பட்டதை அடுத்து சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் இந்த எழுமாற்றுப் பரிசோத னைகளை கடந்த புதன்கிழமை நடத்தினர்.

சாவகச்சேரி பொதுச் சந்தையில் 57 பேரிடமும், கொடிகாமம் பொதுச் சந்தையில் 27 பேரிடமும் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப் பட்டன. இதன்போது 84 பேருக்கும் தொற்று ஏற்படவில்லை என உறுதிப்ப டுத்தப்பட்டது. (ற-9)

# சட்டவிரோத வெளிநாட்டு வேலை: சடலங்களாக திரும்பிய பெண்கள்

**கொழும்பு, டிசெ. 21**

**அங்கீகரிக்கப்படாத முகவர்கள் ஊடாக பெண்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களைத் தேடிச் செல்வதால் சடலங்களாக மீளத் திரும்பிய சந்தர்ப்பங்கள் இடம்பெற்றுள்ளன என பெண்கள் மறுவாழ்வு கழகத்தின் இணைப்பாளர் வாசுகி வல்லிபுரம் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் இடம்பெற்ற சர்வதேச தொழிலாளர் தினத்தையொட்டி கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அங்கீகரிக்கப்படாத முகவர்களின் ஊடாக பெண்கள் பிள்ளைகளைகளையும், உறவுகளையும் பராமரிப்பற்ற நிலையில் விட்டு விட்டு தமது பொருளாதார நிலைகளுக்காக வெளிநாடுகளில் வேலைசெய்து பல இன்னல்களை எதிர்கொள்வதை காணக்கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக அவ்வாறு மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புக்களுக்காக சென்ற பெண்கள் சடலங்களாக திரும்பி வந்த சந்தர்ப்பங்கள் இலங்கையில் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்திலும் இடம்பெற்றுள்ளன.

அதைவிட மேலாக அங்கு சித்திரவதைகளுக்குட்படுத்தப்பட்டு எஜமானன், எஜமானிகளால் சித்திரவதைகள், துஸ்பிரயோகங்கள் என இன்னல்களை சந்தித்து மீளத் திரும்பிய மக்களுக்கு எங்கள் நாட்டில் அவர்களுக்கான பரிகாரமோ அல்லது அவர்களை மீண்டும் நல் நிலைப்படுத்துவதற்கு- பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதற்கு அரசாலோ அல்லது ஏனைய சமூகங்களாலோ எந்தவித உதவிகளும் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இவ்வாறான விடயங்களை அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் கவனத்தில் கொண்டு அவ்வாறான மக்களுக்கு உதவுவதற்கு முன்வர வேண்டும் என்றார். (ம)

# தடுப்புக் கைதி மீது துப்பாக்கிச் சூடு



கொழும்பு, டிசெ. 21

பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட கைதியொருவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. அவர் படுகாயமடைந்து மாத்தறை மாவட்ட மருத்துவம னையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் கந்தார பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்றுள்ளது. இது தொடர்பாக பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோகண தெரிவித்ததாவது:தனது துப்பாக்கியிலிருந்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் ரவைகளை வெளியே எடுத்தவேளை கைதி மீது ரவையொன்று பாய்ந்துள்ளது. இது ஒரு தற்செயலான விபத்து. 30 வயதான கைதி காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் ஆபத்தான நிலையில் இல்லை. இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸார் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் - என்றார். (ம-இ)

# உள்ளூர் துப்பாக்கிகள் மீட்பு

கிளிநொச்சி, டிசெ. 21

வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு உள்ளூர் துப்பாக்கிகள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன. அவற்றை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய அதிரடிப்படையினர் அவர்களைக் கைதுசெய்து ஒப்படைத்துள்ளனர். அவர்கள் விசாரணையின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (த-113)

*அங்கொட லொக்கா இறப்பு*

# இலங்கையின் உதவியை நாடியது இந்திய அரசு

தமிழகத்தில் அண்மையில் மரணித்த இலங்கையின் பாதாள உலகக் குழுத் தலைவர் அங்கொட லொக்காவின் மரணம் குறித்த விசாரணைக்காக, இந்திய குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இலங்கையிடம் உதவி கோரியுள்ளனர்.

இலங்கை அரசிடம் தடயவியல் சான்றுகள் பெற உதவிகோரி இந்திய குற்றப் புலனாய்வுப் பிரிவு இந்திய வெளியுறவு அமைச்சின் ஊடாக இலங்கைக்கு கடிதம் அனுப்பியுள்ளது. கடந்த ஓகஸ்ட் மாதம் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டது எனவும், அங்கொட லொக்காவின் பெற்றோரின் இரத்த மாதிரிகளை வழங்குமாறு அதில் கோரப்பட்டுள்ளது எனவும் இந்திய குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-இ)

## மரண அறிவித்தல்



## திருமதி கனகசபை கமலாம்பிகை

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கினை வசிப்பிடமாகவும், குட்செட் வீதி, வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை கமலாம்பிகை 20.12.2020 அன்று சிவபதம் எய்தினார்.

அன்னார் கனகசபையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முருகேசு-சின்னாச்சியின் அன்பு மகளும், காலஞ்சென்ற அம்பலவாணர்- தெய்வானைப்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, கண்ணம்மா, கணேசு, ஐயம்பிள்ளை, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நகுலேஸ்வரி, லிங்கேஸ்வரன் (சுவிஸ்), லோகேஸ்வரி, பரமேஸ்வரன் (சுவிஸ்), மகாலக்ஸ்மி (லண்டன்), வாகீஸ்வரி (லண்டன்), ஜெகதீஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் தயானந்தன், கார்த்திகா, இலங்கநாதன், துஸ்யந்தி, திருமாறன், பிரதீசன், சுரேந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரன், பிருதுவிராஜ், இந்துஷா, ஹம்சாறிணி, சாகித்தியன், ஜெகதாரிணி, கம்சவர்தனன், அபிராமி, சந்தோஷ், சஹானா, ஸ்ரீராகவன், ஸ்ரீவத்சன், கௌதீஷ், பிரவகி, நிம்கே ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தோவியாஸின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2020) திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 7969 802**
**024 222 6038**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

அச்சுவேலி, கைத்தொழிற்பேட்டையில் அமைந்துள்ள
**Royal flour mills Pvt. Ltd** நிறுவனத்தில்
கால்நடை தீவனத்திற்கான (Royal Cattle Feed)
விற்பனை முகவர்கள் / ஏக விநியோகத்தர்கள் தேவை!

**யாழ்ப்பாணம்/ வடமராட்சி / தென்மராட்சி/ கிளிநொச்சி/ முல்லைத்தீவு / புதுக்குடியிருப்பு/ வவுனியா/ மன்னார்**

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் அனுமதிபெறப்பட்டு கால் நடை தீவன தயாரிப்பில் தனித்துவாமாக இயங்கிவரும் எமது நிறுவனத்தின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு முன் அனுபவம் மற்றும் வியாபாரத்தில் சிறந்து விளங்கும் நிறுவனங்கள் / தனி நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிறுவனத்தினால் வழங்கப்படும் நன்மைகள்**

- தனித்துவமான விசேட விலை மற்றும் விலைக்கழிவு
- மிகவும் குறைவான விலையில் தரமான உற்பதி பொருள்கள்
- பக்க விளைவுகள் அற்ற உற்பத்தி **(Organic Feed)**
- எமது தொழிற்சாலையிலே உற்பத்திகளை, தேவையான அளவு பெற்றுக் கொள்வதால் தேவையற்ற வாகனச் செலவுகளை தவிர்த்துக்கொள்ள முடியும். **(Saving Maney From Transport, Driver, damages)**
- எம் உற்பத்திகளை எம்மவர்களுக்கு தரமாகவும், குறைந்த விலையிலும் வழங்கும் வாய்ப்பு
- பண மீள் கொடுப்பனவு வசதி . **(Cash Back Incentives For Target Achivers)**
- பல் தரப்பட்ட முகவர்களுக்கான இணைந்த சேவை **(Free Vetinery Doctor Consultation For Our Customers**

எமது முகவர்களுக்கு (Agent)

இவை போன்று மேலும் பல சேவைகளை வழங்குவதற்கு எமது நிறுவனமானது தீர்மானித்துள்ளது.

எனவே தகுதியான நபர்கள் தங்களது விண்ணப்பங்களை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**The Chairman**
**ROYAL FLOUR MILLS (PVT) LTD.**
**INDUSTRIAL ESTATE, ATCHUVELY, JAFFNA.**
தொடர்புகளுக்கு: **Mr.F.C. Danial (Head Marketing)**
**076 336 6603**

# கலாசாரத்தை உருவாக்குவது நாட்டின் அரசமைப்புத்தான்!

## பேராசிரியர் கணேசலிங்கம் சுட்டிக்காட்டு

**கிளிநொச்சி, டிசெ. 21**

**ஒரு நாட்டின் கலாசாரத்தை உருவாக்குவது அரசியல் யாப்பே என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.**

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சிக் கிளையின் ஏற்பாட்டில் புதிய அரசியல் யாப்புக்கு தமிழர் தரப்பின் முன்மொழிவுகள் பற்றிய கலந்துரையாடலில் வளவளராகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு நாட்டின் அரசமைப்பு என்பது அந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களின் வாழ்க்கை முறையையும் கலாசாரத்தையும் பண்பாட்டையும் உள்ளடக்கியதாவே இருக்கும். ஆனால் இலங்கையில் இதுவரை உருவாக்கப்பட்டுள்ள அரசமைப்பு இலங்கை நாட்டில் வாழ்கின்ற அதிக இனக்குழுமத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

உதாரணமாக, இலங்கையில் பிரதானமாக 4 மதங்களைப் பின்பற்றுகின்ற குழுவினர் இருக்கின்றபோதிலும் பௌத்த மதத்துக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்பட்டு அரசமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒரு குழுமத்துக்கு ஏற்ற வகையில் உள்ள அரசமைப்பால் நாட்டில் மிகப் பெரிய முரண்பாடுகள் தோற்றம்பெற்றன.

இலங்கையில் உருவாக்கப்பட வேண்டிய அரசமைப்பு அனைத்து இன மக்களினதும் சமத்துவத்தைப் பேணக்கூடிய வகையிலும் இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகளைத் தீர்க்கும் வகையிலும் அதிகாரங்களைப் பகிரும் வகையிலும் இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன், கலையரசன், கட்சியின் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம், கிளிநொச்சி உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் மாவட்ட செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-இ)



## மரக்கன்றுகள் நடுகை

கிளிநொச்சி, டிசெ. 21

'பயன் தரும் மரங்கள் நடுவோம். வளம் பல பெறுவோம்.' மரநடுகை செயற்றிட்டத்தின் மூன்றாவது கட்டம் கிளிநொச்சி-கிருஸ்ணபுரம் கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தவிர, 25 குடும்பங்களுக்கு தலா 10 மா, பலா, ஈரப்பலா, தென்னை, தேசி, தோடை, கொய்யா, மாதுளை, பெசன்புரூட் மற்றும் அக்குரசை மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

புலம்பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண திட்டமிடல் பணிப்பாளர் ச.மேகனபவன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (கு-222)



## வீடு கட்ட அடிக்கல்

கொடிகாமம், டிசெ. 21

சாவகச்சேரி-மட்டுவில் வடக்கில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு வீடு கட்டுவதற்கான அடிக்கல் நடுகைசெய்யப்பட்டது.

சௌபாக்கியா வீட்டுத்திட்ட திட்டத்தின் கீழ் கடந்த 14 ஆம் திகதி அடிக்கல் நடுகை இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் இ.அங்கஜன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அடிக்கல் நட்டார். (கு-159)

## மாணவர்கள் இருவருக்கு கொரோனா

கொழும்பு,டிசெ.21

பொலநறுவை ரோயல் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்கள் இருவருக்கு, கொவிட் 19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து மாணவர்கள் கல்வி பயின்ற இரண்டு வகுப்பறைகள் மூடப்பட்டுள்ளன என்று பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் தந்தைக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதையடுத்து, இவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை மூலம் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (க-இ)

## பாடசாலைகளை திறக்க இதுவரை முடிவில்லை

கொழும்பு,டிசெ.21

நாடளாவிய ரீதியில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளைத் திறப்பது தொடர்பான தீர்மானம் இந்த மாதம் 31ஆம் திகதிக்குப் பின்னரே எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார மற்றும் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

காலை 7.30 மணியிலிருந்து பகல் 1.30 மணிவரை பாடசாலைகளை நடத்துவது சிறந்தது என, விசேட மருத்துவ நிபுணர்கள் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு மதிப்பாய்வு வகுப்புகளை நடத்த கோரப்பட்ட அனுமதிக்கு, சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியது.

அத்துடன் அடுத்தாண்டு ஜனவரி இரண்டாம் வாரத்திலிருந்து பாடசாலைகளைத் திறப்பதற்கு கல்வி அமைச்சு தயாராகி வருகிறது. இதற்கான அனுமதியையும் சுகாதார அமைச்சு வழங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## பொலிஸ் பரிசோதகர் திடீர் மரணம்

திருமலை,டிசெ.21

திருகோணமலை நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் பரிசோதகர் நேற்று அதிகாலை திடீரென உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை நாச்சிக்குடா பகுதியைச் சேர்ந்த பீ.எச்.சுமண பண்டார (54 வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது இறப்புக்கான காரணம் இன்னும் வெளியாகவில்லை. சடலம் திருகோணமலை பொது மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (க-இ)

## வலி. வடக்கு பிரதேச சபையின் சேவையில் பாதிப்புகள் இல்லை

வலிகாமம், டிசெ. 21

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் செயற்பாடுகள் வழமைபோல் இடம்பெறும் என வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபை ஊழியர் ஒருவருக்கு நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே தவிசாளர் இவ்வாறு அறிவிப்பை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறித்த ஊழியர் மின்மோட்டார் இயக்கும் கடமையைப் புரிபவரே தவிர பிரதேச சபை ஊழியர்களோடு நேரடித் தொடர்பு கொண்டிருக்கவில்லை. குறித்த ஊழியர் வலி. வடக்கு பிரதேச சபையின் தெல்லிப்பழை உபஅலுவலகத்தில் கடமை புரிகின்றார் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டமை வடக்கு பிரதேச சபையின் செயற்பாடுகளில் எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்தாது - என்றார். (ம-20)

## பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு உதவிப்பொருள்!

மன்னார், டிசெ. 21

மன்னார் மாவட்டத்தில் இயங்கிவரும் மன்னார் மாவட்ட துயர் துடைப்போர் மறுவாழ்வுச் சங்கம் பெற்றோரை இழந்து வறுமையில் உள்ள 100 மாணவர்களுக்கு நேற்று உதவிப்பொருள்கள் வழங்கி வைத்துள்ளது.

இந்த அமைப்பு ஒவ்வொரு வருடமும் 100 மாணவர்களைத் தெரிவுசெய்து இவ்வாறு உதவி வழங்கி வருகின்ற நிலையில் இந்த வருடமும் 100 மாணவர்களுக்கு உதவியுள்ளது. இந்த 100 பேரில் 60 மாணவர்கள் பெற்றோர் இருவரையும் இழந்தவர்கள். 40 மாணவர்கள் பெற்றோர் இருவரில் ஒருவரை இழந்தவர்கள்.

இந்த 100 மாணவர்களுக்கும் 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகளும் சர்வோதயம் அமைப்பால் வீட்டுத்தோட்ட மரக்கறி விதைகளும் வழங்கப்பட்டன. (ச-60)

## விற்பனைக்கு

யாழ் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் 8 பரப்பு காணியும் வீடும், கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் 3 பரப்பு காணியும், திருநெல்வேலி கலாசாலை வீதியில் 10 பரப்பு காணியும் யாழ் பிறவுண் வீதியில் 6 பரப்பு, 4 பரப்பு, 3 பரப்பு காணியும், யாழ். நாவலர் வீதியில் இலுப்பையடிச் சந்திக்கு அண்மையில் 8 பரப்பு, 3 பரப்பு காணியும், கொக்குவில் சந்திக்கு அண்மையில் 2 1/2 பரப்பு காணியும் வீடும், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் வைத்திய சாலைக்கு அண்மையில் 6 பரப்பு, 4 பரப்பு, 22 பரப்பு காணியும், யாழ் வெலிண்டன் சந்திக்கு அண்மையில் 2 பரப்பு வீடும், காணியும், நல்லூர் முருகன் கோவிலுக்கு அண்மையில் 5 பரப்பு காணியும், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு முன்பாக 3 கடைகளும், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் மாநகர சபை கட்டடத்திற்கு முன்பாக 1 கடையும் விற்பனைக்கு உண்டு.

**0777 232 535**


## 24 ஆண்டுகளின் நினைவுகளோடு



அமரர்
**வி.எஸ்.குணசிங்கம்**
(ஓய்வுபெற்ற வனபரிபாலன திணைக்கள எழுதுநர்)

காலங்கள் நகர்வு
மாற்றங்களின் விரைவு
உறவுகளின் வரவு
இருந்தும் .... இன்றும்
எம்மை வழிநடத்துவது உங்களின்
இறுக்காமான இதமான ஆளுமைதான்

**என்றும் உங்கள் ஆசியுடன்**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

உறவாக 05.02.1931 நினைவாக 16.12.1996

இல.03, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



20.12.2020 அன்று இறைபதம் அடைந்த எமது பாலர் பகல்விடுதியும் முன்பள்ளியினதும் நிர்வாக சபை உறுப்பினர் **திரு. தி. முத்துக்குமார்** அவர்களின் தாயாரும், நீர்வேலி நலன்புரிச் சங்கம் லண்டன் தலைவர் **திரு. மா.திருவாசகம்** அவர்களின் சகோதரியுமான

**அமரர் தியாகராசா மங்களேஸ்வரி**

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாலர் பகல் விடுதியும், முன்பள்ளியும், நீர்வேலி.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 06 . 1930



இறப்பு 19 . 12 . 2020

**திருமதி சிவபாக்கியம் ஜெயரட்ணம் (ரோசா ரீச்சர்)**
**(இளைப்பாறிய ஆசிரியர் - யா/மகாஜனாக் கல்லூரி)**

யாழ் கொல்லங்கலட்டி, தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் Scarborough, Toronto வை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவபாக்கியம் ஜெயரட்ணம் அவர்கள் 19.12.2020 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயிரமுத்து-சிதம்பரம் ஆகியோரின் அன்பு மகளும், ஜெயரட்ணம் (Former Assistant Commissioner-Department of Labour) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜெயபாலன் (Malaysia), சத்தியபாலன் (Canada) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகேஸ்வரி, கீத்திகாவின் அருமை மாமியும், பிரியா, அர்ஜான் ரூபன், நிரூஷா, சாமுத் ஆகியோரின் அன்புப் பாட்டியும் காலஞ்சென்றவர்களான இரத்தினபூபதி (Malaysia) அப்புத்துரை (முன்னாள் இ.போ.ச.சாரதி) மற்றும் தனபாக்கியம் (முன்னாள் அதிபர், யா/கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயம்-Newzealand) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Avc, Markham இல் 22.12.2020 அன்று பார்வைக்காக வைக்கப்பட்டு பின்னர் பி.ப 17.30 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**ஜெ.சத்தியபாலன்**
**(மகன்-கனடா) 014168047871**

**தகவல் :**
**கனகேஸ்வரி அப்புத்துரை குடும்பம்**
**பூதவராஜர் வீதி, பெரியதமவடி,**
**உடுவில், சுன்னாகம்.**

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**சேக்ஸ்பியர் சர்வின்**



**சேக்ஸ்பியர் மெர்வின்**

மண்டைதீவு 1ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சேக்ஸ்பியர் சர்வின் சேக்ஸ்பியர் மெர்வின் 21.11.2020 அன்று காலமானார்கள்.

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 21.12.2020 திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு இரங்கல் வழிபாடு நடைபெறும்.

எமது செல்வங்களின் மரண செய்திகேட்டு வருகைதந்த பங்கு தந்தை, அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள், பங்கு மக்களுக்கும் றோ.க.த.க பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களுக்கும், ஆதார வைத்தியசாலை சுகாதார வைத்தியசாலை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தி யோகத்தர்களுக்கும், எமது மகன்களின் இறுதி சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் பல்வேறு வகைகளிலும் இறுதி நிகழ்வுகளில் உதவி புரிந்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திரு.திருமதி சேக்ஸ்பியர் (டயானா)**

**1ம் வட்டாரம், மண்டைதீவு.**

## கால்நடை பகிரங்க ஏல விற்பனை

1979ம் ஆண்டின் கமநல சேவைகள் இலக்கம் 58 இற்கு அமைய 14.12.1979ல் வர்த்தமானி மூலமாக வெளியிடப்பட்ட இலக்கம் 66/14 விதி முறைகளுக்கு அமைவாக 2011 ஆம் ஆண்டின் 46ம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000ம் ஆண்டின் 46ம் இலக்க கம நல அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவு 92 இற்கு அமைய உரும்பிராய் கமநல சேவைகள் நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரினால் கீழ் விபரிக்கப்படும் கால் நடையினை கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

01. இடம் :- இருபாலை தெற்கு கமக்கார அமைப்பு (புதிய செம்மணி வீதி)
(கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம்)
திகதி :- 24.12.2020 வியாழக்கிழமை
நேரம்: - காலை 09.30 மணி

**கால்நடை விபரம்**

உரிமையாளர் பெயர் :- தலைவர் கமக்கார அமைப்பு இருபாலை தெற்கு
முகவரி :- இருபாலை தெற்கு
கால்நடை வகை :- மாடு

**குறிப்பு:-** ஏலத்தில் வெற்றிபெற்றவர் உடனடியாக ஏலத்தின் பெறுமதியினை முழுமையாக பணமாகச் செலுத்தி அவ்விடத்திலிருந்து கால்நடையினை உடனடியாக அப்புறப்படுத்துதல் வேண்டும்.


**பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படவுள்ள கால்நடை**
**இருபாலை தெற்கு கமக்கார அமைப்பின் கீழ்**

| உரிமையாளர் பெயர் | முகவரி | இனம் காண் இலக்கம் | கால்நடை வகை |
|---|---|---|---|
| தலைவர் கமக்கார அமைப்பு இருபால தெற்கு | இருபாலை தெற்கு | இல்லை | பெண் |
| | | | வயது |
| | | | 05 |
| | | | நிறம் மா வெள்ளை |

தலைவர்,
கமக்காரர் அமைப்பு
இருபாலை தெற்கு.

## மரண அறிவித்தல்

### செல்லப்பா நடராசா



**தோற்றம் 26.02.1937** **மறைவு 20.12.2020**

வேலணையை பிறப்பிடமாகவும் 192 சேவிஸ் வீதி, கனகாம்பிகைக்குளம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா நடராசா அவர்கள் 20.12.2020 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா நாகம்மா ஆகியோரின் அன்பு மகனும், நல்லம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற தவமணி, ராசா ஆகியோரின் சகோதரனும், ஜெகநாதன், காலஞ்சென்றவர்களான பாஸ்கரன், ஜெயகரன், மற்றும் ஜெயராசா, யோகேஸ்வரி அம்பிகைபாகன், யோகராசா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோமதி, சாந்தா, சுமதி, விஜேந்திரன், நந்தா, பாரதி ஆகியோரின் அன்பு மாமனாரும், வசீகஜன், கிஜாந்தி, வேளாங்கஜன், நிசாந்தினி, கஜனி, டேனுசா, சானுசா, சானுசன், பானுஜா, கிஜாந்தன், டனுஜா, றஜி, பானுஜன், அபி, கரணி, சாலினி, டினுஜா, கிதுசனா, திவானுஜன், டினுஜன், கிலஷ்சி, லிபிசன், யதுர்சி ஆகியோரின் பேரனும், தஸ்வின், பபிஸ்நயன், மதுறிகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2020) முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இரணைமடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**192, சேவிஸ் வீதி,**
**கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி.**
**077 899 7263**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## 12,000 சுற்றுலாவிகள் இலங்கையில் தவிப்பு

கொழும்பு,டிசெ.21
12 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் சிக்கியுள்ளனர் என்று பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர், பஷில் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு மார்ச் 15 ஆம் திகதிக்குப் பின்னர் எந்தவொரு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் இலங்கைக்கு வருகை தரவில்லை. எனினும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பதற்கான ஒழுங்கு படுத்தல் வேலைத்திட்டம் இந்த மாதம் 26ஆம் திகதி ஆரம்பமாகும். இந்த நடவடிக்கை உத்தியோகபூர்வமாக நடைபெறாவிட்டாலும், உரிய பரிசோதனைகளின் பின்னர், அடுத்த வருடம் ஜனவரி 2 ஆம் திகதியிலிருந்து சுகாதார பரிந்துரைகளின் கீழ், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு அழைக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-இ)

## 3 கிராமங்களுக்கு பயணத் தடை

கொழும்பு,டிசெ.21
பேருவளை மக்கொன பிரதேசத்தின் மூன்று கிராம சேவகர் பிரிவுகளுக்கு பயணத் தடை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் 50க்கும் அதிகமான கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று பேருவளை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் வருண செனவிரத்ன தெரிவித்தார்.

அதற்கமைவாக கிழக்கு மக்கொன, மேற்கு மக்கொன மற்றும் அக்கரமலை ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

(க-இ)

## மரண அறிவித்தல்



பிறப்பு
02 . 12 . 1950

இறப்பு
20 . 12 . 2020

### சண்முகம் சொல்வேந்தன்

**(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உதவி முகாமையாளர்)**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சொல்வேந்தன் 20.12.2020 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் அம்மாக்குட்டியின் கனிஷ்ர புத்திரனும், காலஞ்சென்ற அகஸ்ரீன் திரேசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், செலஸ்ரீனா (றஞ்சினி) அவர்களின் பாசமுள்ள கணவரும், சுதர்சன் (கனடா), சுபாஷினி (அமெரிக்கா) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்றவர்களான தம்பையா, சின்னத்துரை, பொன்னுத்துரை (எஸ்போ) லட்சுமி, செல்லம்மா, சின்னம்மா மற்றும் இராசமணி, மங்கையகரசி, சரவணமுத்து, சரச்சந்திரன், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், உஷாந்தினி, ராஜசுரேந்திரன் ஆகியோரின் மாமனாரும், செரீனா, அக்ஷயன், சதூசன், அகனயா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற ஸ்ரான்லி மற்றும் அன்ரன், சந்திரன், றஜனி, மாலினி, ரஞ்சன், ரவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (21.12.2020) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**77, இராசாவின் தோட்டம்.**
021 222 2694, 077 691 3148

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் பணிபுரியும்
**திரு. விஜயச்சந்திரன் அவர்களின் அன்புத் தாயார்**

### திருமதி
### சற்குணநாதன் மகேஸ்வரி (வசந்தி)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**உதயன்**
**நிர்வாக இயக்குநரும், ஊழியர்களும்.**

## மரண அறிவித்தல்

### திருமதி சற்குணநாதன் மகேஸ்வரி (வசந்தி)



கோப்பாய் தெற்கு கொங்கமையைப் பிறப்பிடமாகவும், கேரதீவு வீதி, நாவற் குழியை வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணநாதன் மகேஸ்வரி (வசந்தி) அவர்கள் 20.12.2020 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகலிங்கம் கோடீஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற குமாரசாமி சிவபாக்கியம் தம்பதியரின் இளைய மருமகளும், காலஞ்சென்ற சற்குணநாதன் (AKS சுருட்டு கம்பனி -தேவி) அவர்களின் அன்பு மனைவியும், ரவிச்சந்திரன் (ஸ்கைலைன்ஸ்) அமுதகிரி, அருந்தவமலர், சிவச்சந்திரன் (மரக்கறி வாணிபம், சுன்னாகம்) விஜயசந்திரன் (உதயன் பத்திரிகை பணிமனை) கவிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுசீலா (ஆசிரியர், கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலை) சேகர், செல்வராசா, மதனா, விஜயபாரதி, ஜீவகரன் (ஜீவா ஸ்ரோர்ஸ்- நாவற்குழி) ஆகியோரின் பாசமிகு மாமியும், மகாகிருஸ்ண மூர்த்தி (கனடா), சுகிர்தராணி ஆகியோரின் சகோதரியும், இன்பமலர் (கனடா), மகாலிங்கம், காலஞ்சென்ற நடராசா மற்றும் பொன்னம்மா ஆகியோரின் மைத்துனியும், ஜெகன், விஜய பிரபா, குமரன், சுகந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், துஸ்யந்தன் (கனடா), சுதன் (பிரதேச செயலகம்-சாவகச்சேரி) அரவிந்தன் (அரவிந்தன் நகை மாடம்-யாழ்ப்பாணம்) ஆகியோரின் பெரியம்மாவும், காலஞ்சென்ற கலியுகவரதன் அருணா (பிரான்ஸ்) சுகந்தினி, கேதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் சிறிய தாயாரும், நிலாவிழி (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை) நிகேஸ், சுரேஸ், கஸ்தூரி, நிதர்சன், தர்ஷி, ஜனனிகா, திவ்யா, திலக்சனா, திசானா (கல்வியி யற் கல்லூரி, கோப்பாய்), கஜன், கயழினி (விவசாயபீடம் கிளிநொச்சி), கிசாழினி (மாணவி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி), கௌசிகன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), தனுஜன் (கணினி விஞ்ஞானம் தொழில் நுட்பம், ஊவா-வெல்லச பல்கலைக் கழகம்) ஸ்ரீகஜன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), ஷம்சிகா (தமிழ்த்துறை கிழக்கு பல்கலைக்கழகம்) காயத்திரி, லக்ஷிகா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி) பரீசன் (நாவற் குழி மகாவித்தியாலயம்) இயலினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கஞ்சிற்றா, இனியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2020) திங்கட்கிழமை பகல் 12.00 மணியளவில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வீதியில் அமைந்துள்ள இளைய மகனின் இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கத்திற்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**ஆசிரியர் பயிற்சி கலாசாலை வீதி,**
**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 306 8761, 077 707 9903**
**077 899 5985**

**தோற்றம்**
**05.07.1948**

**மறைவு**
**20.12.2020**

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் பஞ்சாட்சரநாதன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி)

அல்வாயைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும், ஓமந்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பஞ்சாட்சர நாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியர், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி) நேற்று முன்தினம் (19.12.2020) சனிக்கிழமை இறைபதம் அடைந் துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பகீரதியின் அன்புக் கணவரும், ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், செல்லத்துரை - செல்லப்பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், பூபாலசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), அவர்களின் அன்புச் சகோதரரும் மற்றும் ஈஸ்வரதாசன் (ஓய்வு பெற்ற பரிசோதகர் அச்சுவேலி, மந்திகை வைத்தியசாலை) ஞானேஸ் வரதாசன் (வவுனியா), மோகனதாஸ் (சுவிஸ்), செல்வரதி (சுவிஸ்), ஆகியோ ரின் பாசமிகு தந்தையும், அமுதாவின் (விலங்குப் புலனாய்வு அதிகாரி யாழ்ப்பாணம்) பெரியப்பாவும், கைலாயபதி, பூபாலசுந்தரம், ஸ்ரீராம கிருஷ்ணர், மலர், ஜெகதீஸ்வரன், காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தன், பராசக்தி, ஆகியோரின் சித்தப்பாவும் மற்றும் செல்வராணி (ஓய்வு பெற்ற ஆசிரியர் வ/விபுலானந்தாக் கல்லூரி வவுனியா, யா/அச்சுவேலி சென். தெரேசாள் மகளிர் கல்லூரி), சுதேசனா, புஸ்பா (சுவிஸ்), பகீரதன் (சுவிஸ்), பிரபாகரன் (கால்நடை வைத்தியர் சாவகச்சேரி), ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பாலேந்திரா (ஓய்வு பெற்ற பிரதம எழுதுநர்) பத்மாவதி, சிவகணேசதாசன் ஆகியோரின் மைத்துனரும், மற்றும் பகீரதன் (சிங்கப்பூர்), சௌமிதா (ஆசிரியர், விளாத்திகுளம் சிதம்பரம் வித்தி யாலயம் ஓமந்தை), திவாகரன் (கொழும்பு), கம்சிதா, சயந்தனா, சபாந்தினி, அனுஜன் (சுவிஸ்), சிந்துஜன் (சுவிஸ்), கமன்ஜா (சுவிஸ்), பகீசன் (சுவிஸ்), சஞ்சீவன் (தாதி உத்தியோகத்தர், யாழ் போதனா வைத்தியசாலை), குருபரன், லக்ஷன், லாசினி, பிரகீஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.12.2020) திங்கட்கிழமை ஓமந்தையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் ஓமந்தை இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈஸ்வரதாசன் (மகன் - 0770641463)
செல்வ்ராணி (மருமகள் - 0778069922)
ஞானேஸ்வரதாசன் (மகன் - 0775135081)
மோகனதாசன் (மகன் - சுவிஸ் +41794808255)
செல்வரதி (மகள் - சுவிஸ் +41762709924)

தகவல்
குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

**டிப்பர் வாகனம் LN** என்ற தொடரிலக்கத்தை உடைய **கார்கோ டிப்பர்** விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு- **077 367 8019**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் 24 . 07 . 1937

விண்ணில் 21 . 11 . 2020

### அமரர் சிதம்பரம் கிருஷ்ணபிள்ளை

(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர்
தேர்தல் திணைக்களம், சமாதான நீதிவான்)

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (21.12.2020) திங்கட்கிழமை நடைபெறுகின்றது. அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனை வருக்கும் மற்றும் வெளிநாடுகளிலும் உள்ளூரிலும் இருந்த தொலைபேசி மூலமாகவும் துண்டு பிரசுரங்கள், பதாகை கள், மலர்வளையங்கள் மூலமாகவும் இரங்கல் தெரிவித்த அனைவருக்கும் அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்த அனை வருக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தற்போது நிலவும் கொரோனா தொற்றுக் காரணமாக அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட அனைவரையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுக்கு அழைக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

மாசியகம்,
ஆவரங்கால், புத்தூர்.

குடும்பத்தினர்

# கொலைசெய்யும் நோக்கில் துமிந்த செயற்படவில்லை

*ரஞ்சன் ராமநாயக்க நற்சான்றிதழ்*

கொழும்பு, டிசெ. 21

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, பாரத லக்ஸ்மன் பிரேமச் சந்திரவை கொலைசெய்யும் நோக்கத்து டன் செயற்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கொலன்னாவை சம்பவத்துக்கு முன்னர் துமிந்த சில்வாவுக்கு மது வழங்கப்பட்டது என்றும் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித் துள்ளார்.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவை கொலை செய்யவேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருந்த ஒருவர் துமிந்த சில்வாவுக்கு மது வழங்கி பாரத லக்ஸ்மன் பிரேமசந் திரவுடன் மோதலில் ஈடுபடுமாறு கேட்டுக் கொண்டார் என்று ரஞ்சன் ராமநாயக்க தெரி வித்துள்ளார்.துமிந்த சில்வா என்னை ஒரு முறை தொடர்புகொண்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணையுமாறு கேட்டுக்கொண்டார் என்று தெரிவித்த ரஞ் சன் ராமநாயக்க, நான் அரச தரப்புக்குச் சென்றால் எனக்கு எதிரான வழக்குகள் கைவிடப்படும் என்றும் கூறியிருந்தார் என்று ரஞ்சன் தெரிவித்தார். அதன் மூலம் பாரதல லக்ஸ்மன் பிரேமசந்திர கொலை குறித்த உண்மை தெரியவந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

துமிந்த சில்வா அனைத்தையும் என்னிடம் தெரிவித்தார். நான் இதனைப் பதிவுசெய்து வைத்திருக்கின்றேன் எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.துமிந்த சில்வா மதுபோதையிலி ருந்தார். அவருக்கு அந்தக் கொலையை செய்யும் நோக்கமிருக்கவில்லை. அதனால் எந்தப் பயனுமில்லை எனவும் ரஞ்சன் ராம நாயக்க தெரிவித்துள்ளார். (த-இ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 . 05 . 1935

மறைவு 02 . 01 . 2020

திதி: 21.12.2020

### அமரர் சரஸ்வதி தர்மராசா


உங்கள் இறுதி யாத்திரை கண்டு நாம் கதி கலங்கி
ஆண்டொன்று ஆனதுவோ அம்மா அதனிடையே
என்றும் எம் தேவைகள் அறிந்து அவை நிறைவுபெற
உமையுருக்கி அனுதினமும் ஏணியாய் நின்றீரே
உங்கள் நினைவுகள் என்றும் சீராக
எமை வழி நடத்தும் தீப ஒளியாகும் - அதனால்
உயிருள்ளவரை என்றும் மறவோம் உமதன்பை
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி !!!

கைதடி தெற்கு,
கைதடி.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



மலர்வு 27 . 09 . 1953

உதிர்வு 19 . 12 . 2020

### செல்லையா சண்முகதாசன்

தம்பிராய் பூநகரியை பிறப்பிடமாகவும் பூநகரி . கொழும்பு . கனடா ஆகிய இடங்களை வதி விடமாகவும் கொண்ட செல்லையா சண்முகதாசன் அவர்கள் ( யாழ். சென் ஜோன்ஸ் உயர் கல்லூரியில் கல்வி கற்று கடல் கடந்து தொலைத் தொடர்புப்பணியில் கொழும்பு. டுபாய் ஆகிய இடங்களிலும் போர்க்காலத்தில் உதவி நிறவனங்களான SLRC பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம் ( PDRO ) நிருவாக உத்தியோகத்தர் ) ஆகியவற்றுடன் இணைந்து மக்கள் துயர் தீர்த்ததுடன் கிராம அலுவலகர் . இணைப்பாளர் தலைமைக்காரியாலயம் ஆகிய வற்றில் பணியாற்றியவர் கடந்த சனிக்கிழமை 19.12.2020 கனடாவில் காலமாகி விட்டார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான துரையப்பா - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருகமகனும். விமலேஸ்வரியின் அன்புக் கணவரும். சாரங்கன் ( கனடா ). செந்தூரன் ( பிரான்ஸ் ). மயூரன் (கனடா). சரண்யா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிர்மலாதேவி. ஜெகதீசன். சிவநேசன் ஆகியோரின் அன்புச் சகோதருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இடம்பெறும் .

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தவசிகுளம்,
வவுனியா.

தகவல் :
தர்மலிங்கம் நிர்மலாதேவி (சகோதரி)
குடும்பத்தினர் 0777276809

## ஐவர்...

பெண்ணொருவருமே உயிரிழந்துள்ளனர். இவர்களுடன் சேர்த்து நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 176 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 163 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் நேற்றும் 594 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 33 ஆயிரத்த 590 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 37 ஆயிரத்து 261 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 28 ஆயிரத்து 267 பேர் குணமடைந்துள்ளனர். 8ஆயிரத்து823பேர்வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-22)

## தனியாக...

முன்னர் பிரான்ஸில் இருந்து சொந்த இடத்துக்குத் திரும்பியிருந்தார்.

வீட்டில் தனித்து வசித்துவரும் இவரைக் காணவில்லை என்று மதியம் அயலவர்கள் சென்று பார்த்தபோது, அவர் படுக்கையில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவரது உடல் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

## தவறான..

யுவதியே உயிரிழந்துள்ளார். அவரின் சடலம் வீட்டில் இருந்து மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

## இறந்துவிட்ட...

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான புதிய அரசு, இலங்கைக்கு எதிரான ஐ.நா. தீர்மானங்களின் இணை அனுசரணையிலிருந்து இந்த வருடம் விலகிவிட்டது. அந்தத் தீர்மானங்களின் காலவரையறையும் நிறைவடைந்து விட்டது. அந்தத் தீர்மானங்கள் இரண்டும் மரணித்துப்போனமைக்குச் சமமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.நா. உறுப்புரிமை நாடுகளுடன் பேச்சு நடத்தி எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா அமர்வில் இலங்கைக்கு எதிராகப் புதிய பிரேரணை கொண்டு வருவதன் மூலம் செத்துப்போன அந்தத் தீர்மானங்களைப் புதுப்பிக்க முடியாது. அதேவேளை, புதிய பிரேரணையை நிறைவேற்றினாலும் அதற்கு இலங்கை இணை அனுசரணை வழங்காது. அந்தப் பிரேரணையும் வலுவிழந்துதான் போகும்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஜெனிவா விவகாரத்தைக் கையாளும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை விடுத்துள்ள அறிவிப்பு நகைப்புக்கிடமானது. இந்தக் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஜெனிவாவில் இலங்கை அரசை மிரட்ட முடியாது.

இலங்கைமீது புதிய பிரேரணை வந்தாலும் அதை எமது நட்பு நாடுகள் எதிர்த்தே தீரும். நாமும் அந்தப் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்காமல் அதையும் வலுவிழக்கச் செய்வோம்.

தமிழர் பிரச்சினைகளுக்கு உள்நாட்டில் தான் தீர்வு கிடைக்கும். ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகம் தமிழருக்கு ஒருபோதும் தீர்வைப் பெற்றுத்தராது. இதை இன்னமும் தமிழ்த் தேசியக் கட்சிகள் நம்பாமல் இருப்பது சிறுபிள்ளைத்தனமாது - என்றார். (எ-22)

## அமைச்சரவைக்கு....

ஏற்பட்டதை அடுத்து குழப்பமடைந்துள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, அமைச்சர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார் என்றும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

அதனாலேயே அண்மைய அமைச்சரவை சந்திப்புக்கள்கூட இணையவழி ஊடாக நடத்தப்பட்டுள்ளன, எனினும் இணையம் மூலமாக அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தும் அரசின் செயற்பாட்டுக்கு அமைச்சரவையில் உள்ள சில அமைச்சர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர் என்று அறியமுடிகின்றது என்றும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் முக்கிய அமைச்சர் ஒருவரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, "வீட்டுக்குள்ளேயே கொரோனா வந்துவிட்டது. அமைச்சரவைக்குள் கொரோனா புகுந்தது ஆச்சரியம் அல்ல. அமைச்சர்களைக் காப்பாற்றவே இணைய வழி ஊடான சந்திப்புக்களை ஜனாதிபதி நடத்தி வருகின்றார்" என்று அவர் பதிலளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-22)

## யாழ்....

பிளாஸ்டிக் பாவனையைக் குறைக்க வேண்டும் நிறுத்த வேண்டும் என்று பல தரப்பினராலும் வலியுறுத்தப்படுகின்றது. பொதுமக்கள் தாம் உபயோகப்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களை வீசியெறியும் போது, சமூகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. நகரப் பகுதியில் பொதுமக்களால் எறியப்பட்ட பிளாஸ்டிக் பொருள்கள் வடிகான்களுக்குள் தேங்கிக்கிடப்பதால் நீர் வழிந்தோடும் வழிமுறைகள் தடுக்கப்படுகின்றன.

அதேவேளை, இவற்றைச் சுத்திகரிப்புச் செய்பவர்களும் மனிதர்கள்தான் என்பதை பொதுமக்கள் ஒவ்வொருவரும் மனதில் இருத்தி திண்மக் கழிவுகளை தரம் பிரித்து குப்பை சேகரிக்கும் உரிய இடத்தில் போட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமாக வீண் இடர்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். (த-7)

## நீரில்....

வயது மகளுமே இன்று சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் 13 வயது சிறுவன் சடலமாக மீட்கப்பட்டிருந்தான்.

மல்லாவி செல்வபுரத்தைச் சேர்ந்தவர்கள் கப் வாகனத்தில் சென்றபோது வாகனம் குளத்தில் தடம்புரண்டு வீழ்ந்துள்ளதால் வாகனத்தில் பயணம் செய்த நால்வரும் குளத்தில் மூழ்கினர். அவர்களில் சிறுவன் ஒருவன் மாத்திரமே நீந்தித் தப்பித்தான். மற்றைய சிறுவன் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தான்.

வாகனத்தின் சாரதியான கிருஸ்ண பிள்ளை ரசீந்திரன் (வயது-37), அவரது இரண்டு வயது மகளான ரசீந்திரன் சார்ஜனா ஆகியோரை இரவிரவாக தேடும் பணி முன்னெடுக்கப்பட்டது. நேற்றுக் காலை கடற்படையினரின் உதவியுடன் இருவரின் சடலங்களும் மீட்கப்பட்டன.

விபத்து ஏற்பட்ட நேரத்திலிருந்து படையினர், பொலிஸார், பிரதேச சபையினர், பிரதேச செயலகத்தினர் நீர்பாசன திணைக்கள அதிகாரிகள் பொதுமக்கள் ஆகியோர் தொடர்ச்சியாக இரவு இரவாக நின்று கடற்படையினரின் தேடுதல் நடத்தியிருந்தனர். (ஒ-19)

## மருதனார்மடம்....

ஆய்வுகூடத்திலும் நேற்று 563 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அவர்களில் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட 2 பேருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்கள் இருவரும் ஏற்கனவே தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## வலி.வடக்கு....

கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை சேந்தாங்குளம் வசந்தபுரம் வீதியில் தவிசாளர் பயணித்துக் கொண்டிருந்தபோது வழிமறித்த மோட்டார் வண்டியொன்றில் வந்த இருவர் தலைக் கவசத்தால் வாகனத்தின் கண்ணாடி மீது தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் தவிசாளர் முறைப்பாடு செய்திருந்தார். அதையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், தமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இளவாலை, வசந்தபுரத்தைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கான காரணம் தெரியவில்லை என்றும், கைதுசெய்யப்பட்டவரிடம் விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் நேற்றிரவு இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை, தாக்குதல் நடத்தியவர்கள் மது போதையில் இருந்தனர் என்று கூறப்படுகின்றது. (எ-26)

## பல்கலை....

22 வயதான இந்த மாணவர் வெளிநாடு செல்வதற்காகக் கடந்த திங்கட்கிழமை கொழும்பு சென்று, அங்குள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டுள்ளார். அதில் அவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

மாணவனிடம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 5 நண்பர்களுடன் அவர் நெருக்கமாகப் பழகியுள்ளார். எனினும் பல்கலைக்கழக விரிவுரைகளில் அவர் இணையவழி மூலமாகவே கலந்து கொண்டுள்ளார் என்று அறியப்பட்டுள்ளது.

அவரது நண்பர்கள் தொடர்பாகவும், அவர் வவுனியாவில் நடமாடிய இடங்கள் தொடர்பாகவும் சுகாதாரப் பிரிவினர் ஆராய்ந்து வருகின்றனர். தொற்றுக்குள்ளான மாணவர் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-110)

## உள்ளூராட்சி...

முன்னணியுடனும், ஈ.பி.டி.பியுடனும் நாம் மீண்டும் பேச்சு நடத்துவோம். அத்துடன் எதிர்வரும் 23ஆம் மற்றும் 24ஆம் திகதிகளில் நடைபெறும் கலந்துரையாடல்களின் பின்னரே மாநகர சபையில் மேயர் பதவிக்கு யாரை களமிறக்குவது என்பது தொடர்பில் தீர்மானிப்போம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈ.பி.டி.பி. ஆகிய எமக்குச் சில சபைகளின் வரவு - செலவுத் திட்டங்கள் நிறைவேறுவதற்கு ஆதரவு வழங்கின. அந்த அடிப்படையில் யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை என்பவற்றிலும் அந்தக் கட்சிகளின் ஆதரவைக் கோரியிருந்தோம். ஆனால் அவர்கள் அந்தச் சபைகளில் எங்களைத் தோற்கடித்தனர்.

எதிர்வரும் 23ஆம் மற்றும் 24ஆம் திகதிகளில் குறித்த சபைகளின் உறுப்பினர்கள், எமது கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் முக்கிய கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது இரண்டு சபைகளிலும் மேயர் மற்றும் தவிசாளர் பதவிக்கு யாரைப் பிரேரிப்பது என்பது தொடர்பிலும் ஆராயப்படும்.

அத்துடன் இரண்டு சபைகளிலும் ஆட்சி அமைப்பது தொடர்பில் ஈ.பி.டி.பியுடனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனும் மீண்டும் பேச்சு நடத்துவோம், என்றார். (ஒ-5,22)

## இந்திய....

யைக் கவனத்தில் எடுக்காதிருந்த மீன்பிடி அமைச்சர், மீனவர்கள் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி போராட்டம் ஆரம்பித்தபின்னர் வாக்குறுதிகளை வழங்கியுள்ளார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுத்து நிறுத்த வேண்டும் என்று முல்லைத்தீவு மீனவர்கள் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றனர். இது தொடர்பில் மீன்பிடி அமைச்சர் உட்படப் பலரிடம் கோரிக்கைகள் முன்வைத்தபோதும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை என்று அவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். தங்களின் பிரச்சினைகள் தொடர்பாக எவரும் கரிசனை கொள்ளாததால் தாங்களே கடலில் இறங்கி இந்திய மீனவர்களை விரட்டத் தீர்மானித்து ள்ளோம் என்றும் அவர்கள் அறிவித்திருந்தனர். அவர்கள் அதற்றாகக் கடலுக்குச் செல்ல ஆயத்தமானபோது, முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் உட்பட அதிகாரிகள் கலந்துரையாடி, மீனவர்களைத் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

அதன்பின்னர் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். அவர்களின் போராட்டம் 6ஆவது நாளை எட்டியிருந்த நிலையில், இதுவரை இந்த விடயத்தில் மௌனமாக இருந்த மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, திடீரென நேற்று மீனவர்களைச் சந்தித்துள்ளார்.

எதிர்வரும் 30ஆம் திகதி இடம்பெறவுள்ள பேச்சுக்களின் பின்னர், இந்திய மீனவர்களின் அத்துமீறல் இருக்காது. நீங்கள் என்மீது நம்பிக்கையிருந்தால் போராட்டத்தை நிறுத்துங்கள். இல்லையேல் தீர்வு வரும் வரையில் போராட்டத்தை தொடர்வதானால் தொடருங்கள் என்று அவர் மீனவர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை கட்டுக்குள் கொண்டுவரும்வரை கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் விடுவிக்க ப்படமாட்டார்கள். இனிரும் காலங்களில் இந்தப் பிரச்சினை இருக்காது என நினைக்கின்றேன். எதிர்வரும் காலங்களில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையிருந்து, கடற்படை கைது செய்யாதுவிட்டால் மீனவர்களை நீங்களே பிடிக்க முடியும் என்றும் அவர் மீனவர்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார்.

அதையடுத்து, இந்தப் பிரச்சினைக்கு தீர்வை எட்ட சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் மீனவர்கள் தங்கள் தொடர் போராட்டத்தை நேற்று முடித்துக் கொண்டனர். (எ-ஒ-246)

# திருவெம்பாவை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.21
சைவ சமயத்தவர்களின் விரதங்களில் ஒன்றான திருவெம்பாவை விரதம் இன்று ஆரம்பமாகிறது. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து ஆலயங்களில் திருவெம்பாவை விரதப் பூசைகள் சிறப்பாக இடம் பெறவுள்ளன.
சைவ சமயத்தவர்களின் விரதங்களில் சிறப்பு பெற்ற ஒன்றான திருவெம்பாவை இலங்கையில் உள்ள சைவ சமய மக்களாலும், சிறப்பாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. திருப்பாவை விரத நாள்களில் சிவாலயங்களில் சிறப்பு பூசைகள் இடம்பெறும். 10 நாள்கள் விரதம் கடைப்பிடிக்கப்பட்டு 10ஆவது நாளான திருவாதிரை அன்று விரதம் நிறைவு செய்யப்படும்.
பக்குவப்பட்ட ஆன்மாக்கள், மும்மலங்களில் மூழ்கிக் கொண்டிருக்கும் பக்குவப்படாத ஆன்மாவின் மேல் அன்பு கொண்டு அதனை எழுப்பி இறைவனின் அருள் பெற அழைத்துச் செல்வது என்பதே திருவெம்பாவையின் தத்துவப் பொருள் என்று கூறப்படுகிறது. (ப)

# பொதுப் போக்குவரத்துக்களில் சிவில் உடையில் பொலிஸார்

கொழும்பு,டிசெ.21
பொதுப் போக்குவரத்து சேவைகளில், சிவில் உடையில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். பொதுப் போக்குவரத்து சேவைகளில் கொவிட்-19 சுகாதார வழிகாட்டுதல்கள் கடைபிடிக்கப்படுகின்றனவா?, வீதிப் பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகிய பொறுப்புக்கள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன.
வீதிப் போக்குவரத்து விபத்து புள்ளி விவரங்களின்படி, ஆண்டுதோறும் டிசெம்பர் 20 முதல் ஜனவரி 5 வரை அதிகமான விபத்துக்கள் பதிவு செய்யப்படுகின்றன.
ஆகவே, வீதிகளில் பஸ் சாரதிகளின் நடத்தைகளை பொலிஸார் கவனிப்பர். அதன்படி முகக்கவசம் அணிந்தபடி பயணிகள் ஏறுகிறார்களா, ஆசனங்களின் எண்ணிக்கையின் அளவில் பயணிகள் ஏற்றப்படுகிறார்களா என்பன கண்காணிக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (கு-இ)

## மாபிள்ஸ்
ரெறாசோ ( Terrazzo) மாபிள் பதித்தல்
கிறனைற் (Granite) சமையலறைத் தட்டு, நில வேலைகள்
நவீன முறையில் செய்து தரப்படும்
Since-1952
தொல்புரம். தொடர்பு: 021 225 0186, 077 355 3372, 077 630 6733

## துரித பொதிகள் சேவை
DHL வெளிநாடுகளுக்கு 3-5 நாட்களில் தபால்கள் மற்றும் பொதிகள் அனுப்பிவைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd
321, K.K.S. Road, Jaffna. 46, Adiyapatham Road, Thirunelvely.
0777554528, 021 222 7835

## வேலை வாய்ப்பு
Strawberry Express - Pvt Ltd
தையல் துறையில் அனுபவமிக்க ஆர்வ முள்ள பெண்கள் எமது நிறுவனத்துடன் உடனடியாக தொடர்புகொள்ளவும்.
முகவரி: 5 ஆம் மதவடி, முல்லை வீதி, பரந்தன் கிளிநொச்சி.
074 048 1279, 077 539 1655

## காணி விற்பனைக்கு
வசாவிளான் பாடசாலைக்கு முன்வீதியில் 1 km தூரத்தில் 28 பரப்புக் காணி விற்பனைக்கு. மூன்று பக்கம் பாதை கொண்ட தோட்டம் செய்வதற்கு, வீடு கட்டுவதற்கு, பண்ணை போடுவதற்கு உகந்த அழகிய காணி. வாங்க விரும்புபவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:077 53 89987, 076 763 8440, 077 4235458


## Physics Online Classes
Paper Class
Heat, Electricity
சனி, ஞாயிறு, புதன், வியாழன்
காலை 5.00 am - 6.30 am
2022 Batch
Basic, Mechanics
திங்கள், செவ்வாய், வெள்ளி
காலை 5.00 am - 6.30 am
தொடர்புகளுக்கு: Colacity
234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
074 136 5446
- Tutes கட்டணமின்றி நிறுவனத்தில் நேரில் பெறலாம்
- மாணவர்கோரும் கடந்தகால வினாக்கள் வகுப்பு நேரம் தவிர்ந்த பிரத்தியேக நேரத்தில் செய்து விடப்படும்.

Mr.C.Thivyan BSc, PGDE

# வவுனிக்குளம் அணைக்கட்டில் பயணிக்கத் தடை

முல்லைத்தீவு, டிசெ. 21
முல்லைத்தீவு-வவுனிக்குளம் அணைக்கட்டு மீதான வாகனப் போக்குவரத்துக்கு முல்லைத்தீவு நீர்ப்பாசனத் திணைக்களம் தடை விதித்துள்ளது.
நேற்றுமுன்தினம் வவுனிக்குள அணைக்கட்டின் மேலாக பயணித்தபோது விபத்து ஏற்பட்டு கப் ரக வாகனம் குளத்தில் வீழ்ந்ததில், அதில் பயணித்தவர்கள் உயிரிழந்தனர். இதனையடுத்து மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (த-ரி2)

# மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 10 . 1949
மறைவு 20 . 12 . 2020

## சோமசுந்தரம் புவனசுந்தரம்
(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணம் கச்சேரியடி சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் நாகலிங்கம் வீதி கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் புவனசுந்தரம் (நேற்று 20.12.2020) இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் புவனேஸ்வரியின் அன்பு மகனும் இராமுப்பிள்ளை இரத்தினம் தம்பதிகளின் மருமகனும் இராசேஸ்வரியின் அன்புக் கணவரும், மயூரன் (Northlink engineering), அனுஜா ( இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), தனுசா (பிரதேச செயலகம், தெல்லிப்பழை), ஆரூரன் (Northlink engineering), சயந்தன் (Jonn keells Automation (pvt) ltd) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காஞ்சனா வினோதரன் (தேசிய வீடமைப்பு அதிகாரசபை), சுரேந்திர தேசிகர் (தொழிநுட்ப உத்தியோகத்தர்), காயத்திரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆரணன், கிருஸ்ணிகா, ஜஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பஞ்சாட்சரம் காலஞ்சென்ற மகேஸ்வரன், ஜெகதீஸ்வரி (லண்டன்), இராசேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற சோதிலிங்கம், தச்சணாமூர்த்தி (லண்டன்), காலஞ்சென்றகுமரகுருபரன், நகுலேஸ்வரி, முருகதாஸ் கௌரி, காலஞ்சென்ற திருக்கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை சண்முக நாதன், இராமுப்பிள்ளை யோகநாதன் இராமுப்பிள்ளை வேலநாதன், மற்றும் லோகநாதன், செல்வநாதன்( நகுலன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் (நாளை 22.12.2020) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகலிங்கம் வீதி,
கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்புக்கு: 0768354514

# மோ.சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் சாவு!

வாழைச்சேனை, டிசெ. 21
உழவு இயந்திரம் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்ததுடன், அவரது தந்தை படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட செம்மண்ணோடை கறுவாக்கேணி வீதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
மோட்டார் சைக்கிளில் பயணித்த வாழைச்சேனை - விநாயகபுரத்தைச் சேர்ந்த தவசீலன் கிரேஜன் (வயது 18) எனும் இளைஞனே சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். அவனது தந்தை படுகாயங்களுடன் வாழைச்சேனை ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
தந்தையும், மகனும் மரண வீடு ஒன்றுக்குச் சென்று கொண்டிருக்கும்போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-ப)

# கொரோனா வழிகாட்டல்களை முஸ்லிம்கள் பின்பற்றவேண்டும்

கொழும்பு, டிசெ. 21
சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு முஸ்லிம் மக்களிடம் அகில இலங்கை ஜமயத்துல் உலமா சபை கோரிக்கை விடுத்துள்ளது.
பி.சி.ஆர். பரிசோதனைகள் சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களுக்கு அமையவே நாட்டின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. கொவிட் தொடர்பான சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். சில பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு முஸ்லிம்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் சபை கோரியுள்ளது.
சில பகுதிகளில் பி.சி.ஆர். பரிசோதனைகளை நடத்த உரிய ஒத்துழைப்பு வழங்கப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது எனவும் சபை குறிப்பிட்டுள்ளது. (கு-இ)